J. E. C
58, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(நாகவிகாரைக்கு எதிரில்)
G. A. Q., B. A.
புதிய — மீட்டல் — வகுப்புகள்
வரதராஜன் குரு
அருள்நங்கை குமரன்
ஏனையோரும்
23—01—1982 (காலை 9 மணி)
பதிவாளர்
2036

விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 தை 8 றவி அவ் 27 இதழ் 339
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 21-1-82

அப்பளம் தயாரிப்பாளருக்கு..
நவீன இயந்திரங்கள் மூலம்
அனுபவமிக்க தொழிலாளர்களால்
தயாரிக்கப்பட்ட தரத்தில் உயர்ந்த
"உழுந்து மாவு"
1 கிலோ--ரூபா 14/-க்கு
மொத்தமாக எங்களிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
M. G. M. (சிவலிங்கப்புளியடி)
777, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 611. 2034

★ காணிப்பதிவில் எதிர்நோக்கப்படும்

# தமிழர், முஸ்லிம்களின் கஷ்டங்கள் நீங்கும்

## சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்

(கொழும்பு)

**தமிழ், முஸ்லிம் மக்கள் காணிகளை விலைக்கு வாங்கும்பொழுது இதுவரை காலமும் அனுபவித்துவந்த கஷ்டங்களை நீக்கும் வகையில் 1963ம் ஆண்டு காணிப் பதிவுச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அமைச்சரவை சம்மதம் தெரிவித்துள்ளது.**

வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத் தெரிவித்த கருத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டு, இந்த முடிவைச் செய்துள்ளதாக நேற்று அமைச்சரவைப் பேச்சாளராக நிருபர்களைச் சந்தித்த கல்வியமைச்சர் திரு. ரனில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

வெளிநாட்டவர்கள் காணிகள் வாங்குவது தொடர்பாக 1963ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 11ம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினுல் சிங்களவர் அல்லாத தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க நேர்ந்ததென்று அமைச்சர்ஜனுப்ஹமீத்அமைச்சரவையில் எடுத்துக் கூறியுள்ளார்.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட 1963ம் ஆண்டிலிருந்து அரசுக்கு இதனுல் இதுவரை ஒரு லட்சத்து 5ஆயிரம் ரூபாய் மாத்திரமேலாபமாகக் கிடைத்துள்ளதென்றும், ஆனுல் இச்சட்டத்தினுல சிங்களவர் அல்லாத மக்கள் பட்ட கஷ்டங்கள் அதைவிட அதிகமென்றும் ஜனுப் ஹமீத் எடுத்துக் கூறியுள்ளார், இன்னமும் மூவாயிரம் உறுதிகள் வழங்கப்படாமலிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அமைச்சர் ஜனுப் ஹமீதின் கருத்தை ஏற்றுக்கொண்ட அமைச்சரவை மேற்படி சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்ய முடிவுசெய்துள்ளது. இத்திருத்தத்தின்படி காணிப்

(8ம் பக்கம் பார்க்க)

## மகாபொல சுவீப் முடிவு

தலாத்து ஓயா மத்திய மகா வித்தியாலயத்தில் 18-1-82-ல் இழுக்கப்பட்ட மஹாபொல சுவீப் முடிவுகள் வருமாறு—

பரிசு விபரங்கள்—

**80 P 0974**

1வது பரிசு-ஏயர்கண்டிஷன் 26 ஆசனங்கள் இஸுஸு லக்ஸறி பஸ்-பெறுமதிரூ. 495,000

**56 K 0250**

2வது பரிசு-இஸுஸு லொறி செஸிஸ்-பெறுமதி ரூ. 370,000

**123 K 0922**

3வது பரிசு-இஸுஸு- கார் ரூ. 200,000.

**107 L 0248**

4வது பரிசு-மார்ஸி பெர்குஸன் டிராக்டர் பெறுமதி ரூ. 182,000,

**137 R 0950**

5வது பரிசு - இஸுஸு இஎல்எம் வான் பெறுமதி ரூ. 180,000.

**111 F 0040**

6வது பரிசு-ஐஎம்ரி டிராக்டர் பெறுமதி ரூ. 78,950.

**110 H 0176**

7வது பரிசு- குபோட்டா டிராக்டர் டிரெயிலருடன் பெறுமதி ரூ. 38,000.

**0004 W 0994**

8வது பரிசு- வர்ண டி. வி. வீடியோவுடன் பெறுமதி ரூ. 36,000.

**79 T 0742**

9வது பரிசு- 20'' வர்ண டி. வி. பெறுமதி ரூ. 15.000,

**126 T 0813**

10வது பரிசு- ஹொண்டா மோட்டார் சைக்கிள்—பெறுமதி ரூ. 14,000.

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். மக்கள் வங்கி காசோலைகள் ஏற்கமறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள சில மக்கள் வங்கிக் கிளைக்காரியாலயங்களில் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படாததால்பலர் ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர்.

கொழும்பு மக்கள் வங்கி தலைமைக்காரியாலயக் கிளையில் கடமையாற்றும் ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதன் பிரதிபலிப்பென்று இதுகருதப்படுகிறது. (மா)

உண்ணாவிரதப் போராட்டம்:

## ஆதரவுகோரி இன்று யாழ். நகரில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

1980-ம் ஆண்டு வேலை நிறுத்தத்தினுல் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நிவாரணம் கோரி இம் மாதம் நடைபெறவிருக்கும் உண்ணாவிரதப்போராட்டத்திற்கு ஆதரவு கோரி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று பிற்பகல் கருத்தரங்கொன்று நடைபெறவிருக்கின்றது.

இந்த உண்ணாவிரதப்போராட்டம் இம்மாதம் 26, 27, 28 ம் தேதிகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் மற்றும் பல இடங்களிலும் நடைபெறவிருக்கிறது.

வேலை நிறுத்தக்காரர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க

(8ம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டம் நின்றது

(கொழும்பு)

கல்வி வெள்ளை அறிக்கையை ஆட்சேபித்து நேற்று கொழும்புப் பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆனுல் அதிகாரிகள் எடுத்த துரித நடவடிக்கைகளையடுத்து இந்த ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டது.

இன்று கல்வி வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்காகச் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. காலை பத்து மணிக்கு விவாதம் ஆரம்பமாகும். (ம)

லங்கா சமசமாஜக்கட்சி

## எதிர்க்கட்சிகளுடன் கூட்டாக இயங்கமுடிவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகிய கட்சிகளுடன் கூட்டு முன்னணி ஒன்றை அமைப்பது என்ற தீர்மானத்தை லங்கா சமசமாஜக்கட்சியின் வருடாந்த மகாநாடு ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

[8ம் பக்கம் பார்க்க]

## 'பிரேமா' திரும்புவது பற்றி தகவல் இல்லை

(கொழும்பு)

பிரதம மந்திரி எப்போது இலங்கைக்குத் திரும்புவார் என்பது இன்னமும் சரியாகத் தெரியவில்லை.

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவரும் பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா எப்பொழுது நாடு திரும்புவார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் கல்வி அமைச்சருமான திரு. ரணில் விக்கிரமசிங்காவிடம் நிருபர்கள் கேட்டபோது 'தெரியாது' என்று பதிலளித்தார். (ம)

மங்களகரமான திறப்பு விழா!

கிறீன் பீல்ட் வீடியோ கிளப்

23-01-1982 சனிக்கிழமை பகல் 12 மணிக்கு
இல: 26, நவீனசந்தை,
யாழ்ப்பாணம் என்ற
முகவரியில் திறந்து வைக்கப்படும்

உங்கள் இல்லங்களிலேயே வீடியோ மூலம் சிறந்த பல திரைப்படங்களை கண்டுகளித்து திருப்தியுறும் ல் நோக்குடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சிங்களம் ஆகிய சிறந்த புதிய வெளியீடுகளை எமது வீடியோ நிலையத்தில் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம். முதலில் வருபவருக்கு முதல் சேவை என்னும் அடிப்படையில் அங்கத்தினர் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

கண்ணியமான உபசரிப்பு, திருப்தியான சேவை, சகலவித உள்ளிட வெளியிட வீடியோ படப்பிடிப்புகள், வீடியோ ஒலிப்பதிவுகள், வீடியோ பழுது பார்த்தல் பொறுப்பேற்கப்படும்.

'கிறீன்பீல்ட் வீடியோகிளப்'
நம்பர்: 26, நவீனசந்தை (மேல்மாடி)
யாழ்ப்பாணம். 2021

புதிய பாரளுமன்றக் கட்டிடத் திறப்புவிழா

## ஜனுதிபதி முடிவெடுத்தபின்பே கையளிக்கும் தினம் முடிவாகும்

(கொழும்பு)

புதிய பாராளுமன்றக் கட்டிடம் திறக்கப்படவேண்டிய தினத்தை ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தீர்மானித்த பின்பே அக்கட்டிடத்தை சபாநாயகரிடம் கையளிப்பதற்கான தினமும் தீர்மானிக்கப்படும் என்று தெரியவருகின்றது. முன்பு தீர்மானித்தபடி இந்நிகழ்ச்சிகள் பெப்ரவரி 19ம் திகதி நடைபெறமாட்டாது என்றும் இதற்கான தீர்மானத்தை எடுக்கும் முன்பு ஜனுதிபதி திரு. ஜயவர்த்தன பிரதம மந்திரியோடும் சபாநாயகரோடும் ஆலோசனை நடத்துவார் என்றும் தெரியவருகின்றது. இதுதீர்மானிக்கப்பட்டதன்பின் இப்போதைய பாராளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்படும் என்றும் தெரிகின்றது. (ம)

### மணிவாசகம்

தன்னுடைய ஆத்மாவாகிற ஆலயத்தில்
இறைவனைக்காண்கின்றவன் பிரபஞ்சமாகிய
ஆலயத்திலும் அவரைக் காண்கின்றான்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## தமிழர் பிரச்னையும் பிரிட்டனின் அக்கறையும்

இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் ராஜாங்கஅமைச்சர் திரு. டக்ளஸ் றிச்சார்ட் ஹேட் தமிழ்மக்களின் பிரச்னை மிகவும் பாரதூரமானதென்றும், அதனைத் தீர்த்துவைப்பதில் பிரிட்டன் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதென்றும் சொல்லியிருக்கிறார்.

இது பிரிட்டிஷ் நீதியையா அல்லது பிரிட்டிஷ் ராஜதந்திரத்தையா குறிக்கிறதென்பது கேள்விக்குறியாகும். இரண்டையுமென்று சிலர் கிண்டல் செய்யலாம். நீதிதான் நிலைக்குமென்பதுநாமறிந்த உண்மை.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா முன்னொருமுறை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலேயே, இவ்வாறு கூறியவர்களுக்கு 'உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்' என்றும், 'உங்களுக்கு வடஅயர்லாந்தில் மிகுந்த தொல்லையிருக்கிறது' என்றும் கூறியதை நினைவுகூர்ந்தால் பிரிட்டிஷ் அமைச்சரின் பேச்சு உறுதியற்றது போல் தோன்றும்.

பிரிட்டனில் 'தனிநாடு' பிரகடனம்செய்வதற்கு எவருக்கும் உரிமை உண்டு என்று அமைச்சர் கூறியது நிச்சயம் பிரிட்டிஷ் ஜனநாயகத்தின் வலிமையை வற்புறுத்துகின்றது. காற்றோட்டமில்லாத வீட்டுக்குள் தென்றல் வீசியது போலிருக்கின்றது.

தனிநாடு, 'தமிழ் ஈழம்' என்ற பேச்சுக்கே இடமளிக்காதென்ற கருத்து எங்கள் நாட்டில் கடந்த ஆட்சியிலும், இன்றைய ஆட்சியிலும் பரவலாக வளர்ந்து வந்த கதை நாமறிந்தத! இதனைத் தீவிரமாக ஆதரித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சகா ஒருவரை இதற்குப்பலிகொடுத்ததும் இன்றையசரித்திரம்.

இத்தீவிர நெருப்புக்கு நீரூற்றியது போன்றது இன்று இங்கு வந்திருக்கும் பிரிட்டிஷ் ராஜாங்கஅமைச்சரின் அபிப்பிராயம்; ஒரு தனி மனிதனின் நோக்கு அன்று அது; ஒரு அரசின் நோக்கு; பிரிட்டிஷ் மக்களின் சுதந்திர தாகத்தை நிரூபிக்கும் நோக்கு.

'தனிநாடு பிரகடனம்' என்ற செய்தி, இங்கு உண்டாக்கிய பரபரப்பும், லண்டனில் அது தடைசெய்யப்படவேண்டுமென்ற ஆவேசமும் அதற்கான பலனற்ற முயற்சிகளும் எங்கள் அரசின் ஆட்சித்திறமைக்கு எவ்வகையிலும் உதாரணமாகா.

ஈழப்பிரகடனத்துக்கு உரிமை உண்டென்று பிரிட்டன் கருதுவதால் அதனை ஆதரிக்கிறதென்று எவரும் நினைக்க வேண்டியதில்லை; ஆனால் அதனை அவ்விடத்திலேயே முளையில் கிள்ளிவிடவேண்டுமென்று கொள்வது அதனை வளர்ப்பதாகவே முடியும்.

வட அயர்லாந்து விடுதலை இயக்கம், பலஸ்தீனிய விடுதலை இயக்கம் — இவை போன்ற பல விடுதலை இயக்கங்களின் நோக்கம் ஒன்றேயாயினும் அவை எவ்வகையில் நிறைவேறுமென்பது அவற்றின் வேறுபட்ட வரலாற்றின் விளைவெனக் கொள்ளவேண்டும். அது போன்றுதமிழ்மக்கள், இந்த நாட்டில் தமக்குரிய மதிப்புடனும் அரசியல் உரிமையுடனும் வாழ்வதற்கு, இந்த நாட்டின் வரலாறும் குறிப்பாக இன்றைய அரசியல் சூழ்நிலையும், விடுதலை இயக்கத்தின் பலமுமே முக்கிய கருவிகளாகும்.

முடிவு என்ன உருவம் எடுக்குமென்பதைக்கணிப்பதற்கு எமக்குப் போதிய அரசியல் தூரநோக்குஇல்லையாயினும், உரிமைகளைப் பறிகொடுத்த மக்கள் உள்ளத் தூய்மையுடன் போராடினால் தோல்வியடைவதில்லை என்றதேற்றம் எமக்குண்டு.

## வாழ்க்கைச் செலவும் அமைச்சர் உபகுழுவும்

உழைத்துக் களைக்கும் தொழிலாளிக்கு உற்சாகம் ஊட்டும் தேநீர், கடைக்குக் கடை வித்தியாசமானவிலை என்றால் மற்றும் பொருட்களைப் பற்றிப் பேச வேண்டுமா?

நாடு முழுவதிலும் ஒரு கோப்பை தேநீர் ('கோப்பைக்கு' மன்னிக்கவும்) ஒரே விலையென்று கட்டுப்படுத்த முடியுமானால் வாழ்க்கைச் செலவைக் குறைக்க வழிகளை ஆராய்ந்து வரும் அமைச்சர்களின் உபகுழு தனது பணியில் தொடரலாம என்பதே எமது சவால்.

தாராளமான இறக்குமதிக் கொள்கைக்கும், கட்டுப்பாடற்ற வியாபாரத்துக்கும் தொடர்புகாண்பது கடினமா?

எங்கும் எப்பொழுதும் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம்; ஆனால் விலை என்ன என்பதே முக்கியமானதும் நாளுக்குநாள் விலை நினைத்தபடி ஏறிக்கொண்டுபோனால் வாங்கும் சுதந்திரத்தால் என்ன பயன்?

விலை ஏற்றத்துக்குரியவருவாய் அதிகரிப்பு உண்டா? எனவே ஏழை மக்களைப் பாதுகாப்பது அரசின் அவசிய கடமை.

தனியார் துறையுடன் அரசு வர்த்தகத்தில் போட்டி போடுவதால் யாருக்கு வெற்றி என்பது தெரிந்த விடயம்.

எனவே தாராளமான இறக்குமதிக் கொள்கைக்கு வேண்டிய திருத்தம் செய்வது அவசியம். மனிதனின் அத்தியாவசியமான தேவைகளில் பற்றாக்குறை ஏற்படுத்தும் வர்த்தக முறை மாற்றி அமைக்கப்பட வேண்டியது மிக மிக அவசியம்.

களவைக் கண்டுபிடிப்பது கடினம். களவைக் குறைப்பது விவேகம். உணவு, உடை, தேகாரோக்கியம் போன்ற துறைகளில்தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பு அரசாங்கத்துக்கே உரியது.

இந்த அடிப்படையில் அரசு புனராலோசனை செய்தாலொழிய பாவனையாளர்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றுவது அசாத்தியம்.

# அரசின் நல்நோக்கத்திற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்

**ஏ. ஸி. எம். பரீத்**

(நேற்றைய தொடர்ச்சி)

நாடு பொருளாதார வளர்ச்சியில் துரித முன்னேற்றம் காணும் நோக்கத்துடன் பாரிய மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை விரைவுபடுத்துவதற்காக உலக நாடுகளிலும் உலக வங்கி நிறுவனங்களிலும் ஏராளமான பணத்தை நன்கொடை மூலமாகவும் கடன் அடிப்படையிலும் பெற்றிருக்கிறது. இப்பணத்தை நாம் மானியங்களாகப் பெற நினைப்பது இந்நாட்டு மக்களைத் தற்கொலைக்கு இட்டுச் செல்வதாகவே முடியும்.

சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த சிங்கப்பூர் பிரதமர் தான் கலந்துகொண்ட ஓர் வைபவத்தில் பேசும்போது கூறியதை நாம் நினைவில் வைத்திருப்பது மிக நல்லது. அவர் கூறினார், ''எனது அரசாங்கம் எண்ணினால் எமது மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளுக்கான செலவை மானியங்களாக வழங்க முடியும். அந்த அளவுக்கு எமது நாடு அபிவிருத்தியடைந்த நாடு என்று சொல்வதில் நான் பெருமை அடைகிறேன். ஆனால் மக்களுக்கு மானியங்களைக் கொடுத்து எமது மக்களைச் சோம்பேறிகளாக்க நாம் விரும்பவில்லை. அதேபோல் மக்களும் மானியங்களை விரும்புவதில்லை; உழைத்து உண்பதையே பெரிதென அவர்கள் விரும்புகிறார்கள்'' என மிக அழகாகக் கூறினார். இதிலிருந்து நாமும் உழைத்து உண்ணப் பழகிக் கொள்ளவேண்டும். இதைத்தான் நாட்டு நலனில் அக்கறை உள்ள அரசியல்வாதிகளும் விரும்புகிறார்கள்.

இதை அடிப்படையாக வைத்து எமது நாட்டின் அப்போதைய பிரதமர் காலஞ்சென்ற திரு. டட்லி சேனநாயகா அவர்கள் மானியங்கள் வழங்குவதைக் குறைத்துப் பொருளாதாரப் புரட்சியை நாட்டில் ஏற்படுத்த எண்ணினார். ஆனால் அவருடைய எண்ணம் ஈடேறவில்லை; காரணம் அப்போதைய பலம்வாய்ந்த இடதுசாரி இயக்கங்கள் ஒரு ஹர்த்தாலை நடாத்தி டட்லியின் அந்த நல்ல எண்ணத்தை ஈடேற விடாமல் தடுத்துவிட்டன. ஒரு வேளை அந்த ஹர்த்தால் தோல்வியில் முடிந்திருந்தால் இந்த நாடு இதுவரையில் மகாவலித்திட்டம் பூர்த்தியடைந்து உணவில் தன்னிறைவு கண்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

**நல்ல நோக்கம்**

எனவே தற்போதைய அரசாங்கம் இந்நாட்டை அபிவிருத்திப்பாதையில் முன்னேற்றிச் செல்வதற்கு பல வழிகளையும் ஏற்படுத்துகின்றது. அவைகளில் ஒன்றுதான் இப்பாடசாலைகளை ஒருங்கிணைத்து கொத்தணிப் பாடசாலைகளென்றும் இதிலிருந்து பிரிந்து தனித்தியங்கும் கல்லூரிகளை ஒற்றை நிலைப் பாடசாலைகள் என்றும் வித்தியாசப்படுத்தி ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் மாணவர்களுக்குச் சென்றடையும் கல்வி மானியத்தைக் குறைத்து கொத்தணிப்பாடசாலையில் பயிலும் ஏழைமாணவர்களுக்கு அதிக மானியத்தையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்தித்தர விரும்புகிறது. இந்த நல்ல நோக்கத்துக்கு நாம் பூரண ஒத்துழைப்புக் கொடுத்துநாட்டின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும்ஆசிரியர் கல்விவெள்ளையறிக்கை பற்றிய ஆய்வுக்கட்டுரையில் ''ஹம்பஹா மாவட்டத்தில் கொத்தணி முறையில் பரீட்சார்த்தமாக நடத்தப்படுவதாகவும் அதில் ஒரு முன்னேறிய முஸ்லிம் கல்லூரியான அல்முபாரக் மகாவித்தியாலயம் மூலாதாரப்பாடசாலையாக இயங்குவதாகவும் அக்கல்லூரிக்கு அப்பகுதியில் வாழும் முஸ்லிம் தனவந்தர்கள் ஒன்பது லட்சம் ரூபாய்களை அபிவிருத்திக்கு நன்கொடை அளித்திருக்கிறார்கள் என்றும், ஆகையால் இக்கொத்தணியில் இணைந்திருக்கும் ஏனைய சிங்களப்பாடசாலை மாணவர்கள் இக் கல்லூரியின் மூல வளங்களைப் பாவிக்க விரும்புவார்களா? எனக்கேள்வி கேட்டு எழுதியிருக்கிறார். மேலும் இத்தனவந்தர்கள் மேற்கொண்டும் இக்கல்லூரியின் மேன்மைக்

(7 ம் பக்கம் பார்க்க)

## செட்டிகுளத்தில் வளரும் கலைஞர்க்கு மேடைநாடகப் பயிற்சி

**என். கே. தர்மலிங்கம்**

இம் மாதம் 6ம் திகதி தொடக்கம் 10ம்திகதி வரை மேடை நாடகப் பயிற்சி செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இப்பயிற்சி செட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அடிப்படையில் அமைந்தது.

நாடகத்துறையில்டிப்புளோமாப் பட்டம் பெற்ற வட்டாரக்கல்வியதிகாரி திருவாளர் இ. சிவானந்தன் இக்களப் பயிற்சியின் இயக்குனராக இருந்து அயராது உழைத்தமையில் இத்துறையில் துறைபோன பலவகைக் கலைஞர்களும் தங்களின் முறையான பங்களிப்பைத் தந்தமையில் நாற்பதுக்கு மேற்பட்டோர் பயன் அடைந்தார்கள் என்று துணிந்து கூறலாம்,

நாள்தோறும் காலை 7 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை அமைந்த இப்பயிற்சிக் களத்தின் பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய உரிய விளக்கத்தைத் தந்தது முதலாவது நாள் வன்னிப்பிரதேசத்தில் மிகவும் தொன்மை வாய்ந்ததாக இன்னும் மிளிர்ந்து கொண்டிருக்கும் பாவற்குளம் இராஜநாயகம் குழுவினரினது கோலாட்டத்துடனும் திரு. எம். வி. யோசப் அண்ணாவியாரது கூத்துப் பாடலுடனும் தொடங்கியது. இந்தப் பயிற்சியை நடாத்தித் தர சிறந்த நாடக எழுத்தாளராகிய திரு. இ. முருகையன். நாடக அரங்கக் கல்லூரி அதிபர் திரு. ம. சண்முகலிங்கம், திரு. சி. மௌனகுரு, இணுவில் வீரமணி ஐயர், ஒப்பனையாளர் திரு. எஸ். ரி. அரசு போன்ற தலைசிறந்த கலைஞர்களினாலும் திரு. இ. சிவானந்தன் திரு, பிரான்சிஸ் ஜெனம், திரு வி. எம். குகராசா, திரு. சிதம்பரநாதன், திரு. றேமண் போன்ற நடிகர்களினாலும் பயிற்சிகள் நடாத்தப்பட்டன. நாடகம் எழுதுதல், நாடகத் தயாரிப்பு உரையாடல் நடிகனின்உடலுறுப்புக்களைஅறிதல் அங்க அசைவுகள் அரங்க விளையாட்டுக்கள், என வகுக்கப்பட்டு விரிவுரைகள் மிகக் குறுகியதாகவும் அதேநேரத்தில் வெளிக்களப்பயிற்சியே முக்கிய மானதாகவும் இடம் பெற்றது.

இதனால் கலந்து கொண்டவர் பல மாதங்களில் பெறக்கூடியபயிற்சியைக் குறுகிய காலத்தில் பெறமுடிந்தது.

அவ்வாறே இரண்டாவது நாள் பெரும் பகுதி நாட்டுக் கூத்து, சிறுவர் அரங்கம் உடற்பயிற்சிகள், விரிவுரையாகவும் வெளிக்களப்பயிற்சியாகவும் இடம்பெற்றது. நாடகத்திற்கான இசை அமைப்பு, சங்கீதம் பற்றிய பயிற்சிகளுடன் நாடகமேடைபற்றிய விளக்கம் தரப்பட்டு இரண்டாவது நாளின் பெரும்பகுதி நவீன நாடகங்களில் ஊமத்தின் பங்களிப்பின் அவசியம் மிகவும் சிறப்பாக எடுத்துக் காட்டுகளுடன் விளக்கப்பட்டது. பங்குபற்றியவர் எதிர்பார்ப்புகளுக்கும் அப்பால் ஒரு நடிகன் தனது உடலை எப்படியெல்லாம் தயாராக வைத்திருக்கவேண்டும் என்பது இப்பயிற்சிகளில் முக்கிய விடயமாகக் கருதப்பட்டுப் பயிற்சி கொடுக்கப்பட்டது, மூன்றாவது நாளில் நடிப்பு தென்மோடி வடமோடி நாட்டுக்கூத்துகள் அரங்க விதானம், அரங்க முகாமை, நாடகத்திற்கான நடனம், ஒளியூட்டல் என்பன பற்றிய எடுத்துக்காட்டு விரிவுரைகளும், சுவாசிப்புப் பயிற்சிகள் மூலமாக நடிகன் எவ்வகையில் தனது உடல் நிலையை ஆரோக்கியமாக வைத்திருப்பதன் அவசியத்தையும் தேவையையும் வலியுறுத்தினர்.

நான்காவது நாளில் நடிப்பு குரற் பயிற்சி உடைவண்ணம் ஒப்பனை நாடகத் தயாரிப்பு, நவீன நாடகவகை. நாடக விமர்சனம், நாடகம் நயத்தல் நாடக வரலாறு பற்றிய விரிவுரைகளும் பயிற்சிகளும் கொடுக்கப்பட்டன இறுதியான ஐந்தாவது நாள் பயிற்சியாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் உள்ள நாளாகக் கருதலாம். பகலில் சூடேற்றற் பயிற்சிகள், நாடகத்தயாரிப்பு நடிப்பு, நாடகமேடை அமைப்புகள் பற்றிய பயிற்சிகளும் விளக்கங்களும் தரப்பட்டதுடன் மாலையில் அமைந்த கூட்டத்தில் பயிற்சியாளருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். ஜெகநாதன் இதை வழங்கினார். பினபு பயிற்சியாளர் தாம் ஐந்து நாளாகக் கற்றவற்றுள் சிலவற்றை கலை நிகழ்ச்சிகளாகப் பொது மக்களுக்குச் செய்து காட்டினார்கள். இப்பயிற்சியின் பிரதான நோக்கம் மேடை நாடகங்களின் வளர்ச்சிக்கான உத்திகளைப் பயிற்றுவிப்பதுடன் நவீன முறையில் நாடகங்களை மேடை ஏற்றுவது எவ்வகையில் இடம் பெறவேண்டும் என்பதை உளவியல் முறையாகவும் பயிலுனர்களுக்குப் பயிற்றுவிப்பதாகும். யோகாசன முறையுடன் சார்ந்த பல

(7 ம் பக்கம் பார்க்க)

### நூல்நிலைய புனரமைப்பு நிதி:

# நூலகவாரம் - கொடித்தினம் நடத்த ஜரூர் ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

1981 ஜூன் முதல்வாரத்தில் தீயினல் நாசமாக்கப்பட்ட யாழ். பொதுசனநூல் நிலையத்தை மீள்வித்தல், புனரமைத்தல் தொடர்பில் நூல்நிலைய வாரம் ஒன்றை எதிர்வரும் பெப்ரவரி 22ம் திகதி முதல் நடாத்துவதற்கு யாழ். மாநகரசபையும் நூல்நிலையக் குழுவும் இணைந்து ஒழுங்கு செய்துவருவது தெரிந்ததே.

மேற்படி நூலக வாரத்திற்கு உட்படும் ஒரு நாளாக 26 2 82 வியாழக்கிழமை பாடசாலை மாணவர்களால் மாணவ, மாணவிகள் பங்குபற்றக்கூடியதாக நூலக கொடித்தினம் ஒன்றை ஒழுங்கு செய்யும் ஏற்பாடுகளும் துரிதகதியில் நடைபெற்றுவருகின்றன. இதன் தொடர்பில் வடமாநிலக்கல்லூரி அதிபர்களைஉள்ளடக்கிய உபகுழு சம்பத்தரிசியார் கல்லூரி அதிபர் வண பிதா. பிரான்சிஸ்ஜோசேப்அடிகளார் தலைமையில் பல தடவைகள் கூடி கொடித்தினத்தைவெற்றிகரமாகவும், சிறப்பாகவும் நடத்துவதற்கானதிட்டங்களை வகுத்துச் செயல்படுத்திவருகின்றது.

நூல்நிலைய மீட்புக்காக நடைபெறும் கொடித்தினத்துக்கான ஏற்பாடுகள் ஆரம்ப பாடசாலைக்கும் பங்களிப்புச் செய்யக்கூடியதாக விரிவுபடுத்தப்பட்டு கல்வி வட்டாரஅடிப்படையில் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கல்வி வட்டாரத்தையும் இயைபுப்படுத்தும் கல்லூரி அதிபர்களாகப் பின்வருவோர் தெவுசெய்யப்பட்டுள்ளனர்:

யாழ்ப்பாணம்: தூய யோவான் கல்லூரி அதிபர், திரு. எஸ். ஆனந்தராசா, நல்லூர்: யாழ். இந்துக்கல்லூரி அதிபா, திரு. பீ. எஸ். குமாரசாமி, சாவகச்சேரி: சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர், திரு. பொன் வெற்றிவேலு, கிளிநொச்சி: மத்திய மகாவித்தியாலயஅதிபர், திரு. ஏ. சின்னத்தம்பி, பருத்தித்துறை: ஹாட்லிக் கல்லூரி அதிபர், திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவல். உடுப்பிட்டி: நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர், திரு. கே.குணரத்தினம், காங்கேசன்துறை: மகாஜனக்கல்லூரி அதிபர், திரு. பொன். சோமசுந்தரம், மானிப்பாய்: ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர். திரு. பொன். நாகரத்தினம, வேலணை: சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலய அதிபர், திரு. சி. குலசேபாலசிங்கம், கோப்பாய்: உரும்பராய் இந்துக்கல்லூரி அதிபர், திரு. எஸ். சிவானந்தன், புங்குடுதீவு: மத்தியமகாவித்தியாலய அதிபர், திரு. ஜீ. வி. நல்லதம்பி, பளை: பூநகரி மத்திய மகாவித்தியாலய அதிபர், திரு. எஸ். துரைராஜா, வட்டுக்கோட்டை: சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரி அதிபர் திரு. கே. அருணாசலம்.

கொடித்தினம தொடர்பில் கல்வி வட்டாரங்களை இயைபுபடுத்தும் கல்லூரி அதிபர்கள், சம்பந்தப்பட்ட கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த கல்லூரி அதிபர்களுடன்ஜனவரிகடைசி வாரத்தில் மாநாடுகளை நடத்துவார்கள் என்பதுடன் கொடிதின ஏற்பாடுகளையும் விரிவுபடுத்துவார்கள்.

''நூலக வாரம்'' மற்றும் 'நூலக கொடித்தின' அனுட்டானங்களைப் பொது மக்கள் நன்கு அறியவரும் பொருட்டாக பெப்ரவரி முதல்வாரத்தில் இருந்து சுவரொட்டிகள், துண்டுப்பிரசுங்கள், பாதாகைகள், திரைப்பட மாளிகைகளின் திரைகளிலும் அறிவித்தல்களை வெளியிடுவதுடன் பத்திரிகைகளிலும், வானொலி பரப்புக்களிலும் செய்திகள் வரும்படி பார்த்துக்கொள்வதெனவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கொடித்தினம்தொடர்பான சகல நடவடிக்கைகளையும் பூரணப்படுத்துவதற்காக வண. பிதா பிரான்சிஸ்ஜோசேப்அடிகளார் தலைமையில் இயங்கிவரும் உபகுழு மீண்டும் பெப்ரவரி 6ம் திகதி கூடவிருக்கிறது.

# இலவசபாடநூல் விநியோகம் ஈராண்டு பூர்த்தி விழா

(மட்டக்களப்பு)

இலவச பாடநூல் விநியோகம் செய்வதில் ஈராண்டு பூர்த்திவிழா எதிர்வரும் 28ம் திகதி பியகமதேர்தல தொகுதி சபுஸ் கந்த மகாவித்தியாலயத்தில் கொண்டாடப்படுகின்றது,

இவ்வைபவத்தில் ஜனாதிபதி திரு ஜே,ஆர். ஜெயவர்த்தன, கல்விஅமைச்சர்திருரணில் விக்கிரமசிங்க, கல்விச்சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜயத்திலக உட்பட பல அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும், மாவட்ட அமைச்சர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்,

அன்றைய வைபவம் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் நேரடி அஞ்சல செய்யப்படுவதால் இதனை பாடசாலைகளில் மாணவர்கள் அறியக்கூடிய வாய்ப்புகளை பாடசாலை அதிபர்கள் செய்வதோடு அன்றைய தினம் இவ்வைபவத்தை பாடசாலைகளில் தொகுதிப்பாராளுமன்றஉறுப்பினர், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், கிராமோதைய சபை ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென கேட்கப்பட்டுள்ளார்கள்,

இவ்வருடம் சுமார் 36 லட்சம் மாணவர்கள் இலவச பாடநூல் பெறுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'தமிழர்விடுதலை கூட்டணி திசைமாறிவிடவில்லை'

## கொடிகாமம் பொங்கல்விழாவில் 'நவம்'

(சாவகச்சேரி நிருபர் அ. ஆறுமுகம்)

''வெளிநாட்டிலுள்ளவர்கள் எமது எண்ணத்தையும் எமது தலைவர் திரு. அமிர்தலிங்கத்தின் வழிநடத்தலையும் ஏற்றுள்ளார்கள். ஆதலால்சிலர்பேசிக்கொள்வதுபோல் தமிழர் விடுதலை கூட்டணி திசைமாறிவிடவில்லை. தமிழைக் காட்டிக் கொடுக்கவுமில்லை.

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய முன்றலில் நடந்த தைப் பொங்கல் விழாவிற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில் சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் மேறகண்டவாறு குறிப்பிட்டார்.

வழக்கம்போல வண்டில் ஊர்வலம் கச்சாய் அம்மன் கோவிலிலிருந்து ஆரம்பமாகி கூட்ட மைதானத்தை வந்தடைந்தது.

தொடர்ந்து திரு. நவரத்தினம் உரையாற்றுகையில் கூறியதாவது: அரசுக்கெதிராக நடவடிக்கை எடுக்கின்ற சட்ட மறுப்புச் செயல்களில் இருக்கும் பொழுது முன்னெச்சரிக்கையான அறிவிப்புகள் பலதைச் செய்தே செய்யும். ஆனலும் இன்றைய நிகழ்ச்சிகள் கூட்டணியினருக்கோ குறிப்டாக விழாக் குழுவினருக்கோ சட்டமறுப்பு எனகின்ற தோரணையில் உடன்பாடானது. அல்லது இன்றைய அரசியல் நிகழ்ச்சிகள் குறித்து பலரும் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். எல்லாம் எல்லா நேரத்திலும்சொல்லக்கூடாது. எல்லா நேரத்திலும் செய்யக் கூடிய காரியமுமல்ல.

இன்றைய அரசு பலவிதமான சட்டங்களைப் போட்டு பேச்சுச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியிருக்கிறது. அவை என்னைக் கட்டுப்படுத்தாது. என்றாலும் இன்று நாம் எந்த விதமான சட்ட மறுப்பையும் கையாளாதபடியால் அவை எங்களைக் கட்டுப்படுத்தாது.

வெளிநாடுகளில் அடிமையாக வாழ்கின்ற நாடுகளில் குறிப்பாகப் பலஸ்தீன்போன்ற நாட்டில் விடுதலை இயக்கத்தினருக்கு பட்டாள பலம் இருந்தும் கூட இத்தகைய செயல்களில் ஈடுபடவில்லை என்றால் அவர்கள் விடுதலைப் பிரகடனத்திற்கு முன்னால் செய்து முடிக்க வேண்டிய பலவேலைகள் திருப்திகரமாகச் செய்து முடிக்கப்படாமையே காரணமாகும்.

இதே போலத்தான் நமது ஈழத்திலும் எங்களுடைய நிலை இருக்கின்றது. எம்மிடம் எத்தகைய பலமுமில்லை. ஆகவே விடுதலைக்கு முன்னர் பலவிதமான ஆக்க ரீதியான வேலைகள் செய்யப்பட்டாக வேண்டும், அதற்கு நம் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். சாதி அடிப்படையில் வேறுபாடு காட்டக்கூடாது.

அண்மையில் மாலைதீவுக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள அரசியற் சமூக பொருளாதார நடவடிக்கை ஆய்வு நடத்திய போது கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக எந்த விதமான கொலையும் அங்கே நடைபெறவில்லை. 1976ல் ஒரு கொலை நடந்தது. அது வெளி நாட்டுப்பயணிகள் மதுபோதையில் தங்களுக்குள்ளேயே அடிபட்டு இறந்தார்கள்.

தெருவிலே ஒரு ''பேர்ஸ்'' கிடந்தால் அதைப் பொலிசில் சேர்ப்பார்கள். அல்லது அப்படியே வீதியில் கிடக்கும்.

பல வகையான ஆபரணங்களை அணிந்த கன்னிப்பெண்கள் கூட எங்கும் எந்த நேரத்திலும் நடமாடக் கூடியதாக இருக்கிறது. அந்த அளவிற்கு அங்கு களவில்லை. பொய் இல்லை. கொலையில்லை. அதே மாதிரி எங்கள் நாடும் திருந்த வேண்டும். அப்போது தான் எமக்கு விடுதலை கிடைக்கும். அந்த நாளைக் கண்டிட நீங்கள் எல்லோரும் பாடுபடவேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பளை மகாவித்தியாலய அதிபர் திரு. அ. பொ.செல்லையா, சாவகச்சேரி நகரசபை முதல்வர் திரு. சி.க. மயில்வாகனம், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் திரு. க. பேரம்பலம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(க)

## தமிழ்த் தொழிற் சங்க கூட்டணி செயற்குழு

(கொழும்பு)

தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பிலுள்ள அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பணி மனையில் பண்டிதர் க. பொ. இரத்தினம் பா. உ. தலைமையில் நடைபெறும்,

## கல்வி மந்திரி யாழ் விஜயம்

(கரவெட்டி)

கல்விஅமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாத இறுதியில் யாழ் நகருக்கு விஜயம் செய்யவுள்ளார்.

வட இலங்கை சங்கித சபையின் பொன் விழாவில் கலந்து கொள்ளும் முகமாகவே அவர் இங்கு விஜயம் செய்கிறார்.

வட இலங்கை சங்கீத சபையின் பொன்விழா யாழ்நகரில் கொண்டாடப்படவுள்ளது.

(க)

## மேற்பார்வையாளர் ராஜினாமா

(மண்டைதீவு)

மண்டதீவு, அல்லைப்பிட்டி யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உபபணைகளின் நிர்வாக மேற்பார்வையாளர் பதவியை யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலன் ராஜினாமா செய்துள்ளார்.

### இந்திய வேலைநிறுத்த எதிரொலி:

# மே. வங்க மோதலில் நால்வர் பலி!

புதுடில்லி, ஜன 20

மேற்கு வங்காளத்தில் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்தவர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட கோஷ்டி மோதலைத் தடுக்க பொலிசார் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் நால்வர் பலியானார்கள். என்றும் 15 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

கல்கத்தாவில் பலர் சட்டத்தை மீறி தாமகவே பொலிசாரிடம் வந்து கைதானர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

வேலைநிறுததத்தை ஒட்டி நாடு முழுவதும் 8 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் தொழிலாளர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், சமூக விரோதிகள் ஆகியோரே காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

(இ)

# புதிய பாராளுமன்றக் கட்டிடம் விசேஷ அதிரடிபடைக்காவல்

(கொழும்பு)

கோட்டேயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பாராளுமன்றக் கட்டிடத்துக்கு விசேட பொலிஸ் அதிரடிப்படைக் காவல் போடப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இயங்கிவரும் பிரிவினை கோரும் கூட்டத்தவர் இரகசியத்தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளலாம் என்ற ஐயத்தின் மீதே விசேட ஆயுதங்களைத் தரித்த பொலிசார் புதிய பாராளுமன்றக்கட்டிடப் பகுதியில் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, கட்டிடத்துக்கானஇறுதிகட்டவேலைகள் பூர்த்தியடையும் தறுவாயில் இருந்துவருகிறது. பெப்ரவரி 19ம் திகதி பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா சம்பிரதாய பூர்வமாக மேற்படி கட்டிடத்தை சபாநாயகர் ஜனப் பாக்கீர் மாக்காரிடம் கையளிப்பார்.

(கி)

### வரணி தாக்குதல் வழக்கு

# இனிமேல் உங்களை நீதிமன்ற பக்கம் காணக்கூடாது' நீதிபதி எச்சரிக்கை

(சாவகச்சேரி)

வரணி கரம்பைக்குறிச்சி தாக்குதல் வழக்கில் வழக்காளி சமாதானமாக இணங்க இரு பகுதியினரும் சம்மதித்தனர்

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எம். காரியப்பர் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த கந்தன் சின்னையா, கந்தன் கணபதி என்பவர்கள் அவ்வூரைச் சேர்ந்த சின்னத்தம்பி குமாரசாமிக்கு கத்தி, பொல்லு என்பவற்றால் தாக்கிப் படுகாயமுண்டாக்கியதாகச் சாவகச்

(4ம் பக்கம் பார்க்க)



உற்சாகம் உழைப்பு
ஊக்கம் ஆரோக்கியம்

தருவது புரதச் சத்துமிக்க புரோட்டினெக்ஸ் பரீட்சைக்குப் படிக்கும் பிள்ளைகளும் சதா உழைக்கும் பெற்றோரும் ஆயாசமும், களைப்பும் தீர அருந்துவது புரதச் சத்துமிக்க புரோட்டினெக்ஸ். உடலுக்கு உற்சாகத்தையும் மூளைக்குச் சுறு சுறுப்பையும் தருவது

புரோட்டினெக்ஸ்

புரதச் சத்து நிறைந்த புரோட்டினெக்ஸ்
வாழ்க்கைக்குத் தருகிறது. ஆனந்தம், வலிமை, உற்சாகம்
புரதச் சத்து என்றால்
புரோட்டினெக்ஸ்
சொக்கலேட் ருசியுள்ள பானம்
புரோட்டினெக்ஸ்.
.50 கிரு. விலை ரூபா. 16.85




Pfizer

"ஏன் புரோட்டினெக்ஸ்"
த. பெ. 1362 கொழும்பு

ஏன் புரோட்டினெக்ஸ்
அருந்துகின்றீர்கள் என்பதை எழுதியனுப்பும் சிறந்த வாசகருக்கு கிழமை தோறும் புரோட்டினெக்ஸ் வழங்கப்படும்.

பெயர்: ..............................
விலாசம்: ..............................
அருகாமையிலிருக்கும் புரோட்டினெக்ஸ் விநியோகஸ்தர்: ..............................
திகதி: .............. கையொப்பம்: ..............

### காங்கேசன்துறைப் பகுதியில்

# விசர்நாய்க்கடியை ஒழிக்க இயக்கம்

(மாவிட்டபுரம்)

விசர் நாய்க்கடியை தடுப்பதற்காக நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன,

விசர் நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் பெருகி பலர் விசர்நாய்க்கடிக்கு இலக்காகி வருவதையடுத்து இதனை ஒழிப்பதற்காக சுகாதாரப் பகுதியினர் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.


காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் வலியுறுத்தியதை யடுத்து கொழும்பிலிருந்து இதற்கென விசேட உத்தியோகத்தர்கள் வந்துள்ளனர்.

இவர்கள் தமது முதல் நடவடிக்கையாக நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். மக்களுக்கு இதுபற்றி அறிவித்தல் கொடுத்து குறிப்பிட்ட சில பொது இடங்களில் வைத்து இத்தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

இத் தடுப்பூசி ஏற்றும் வேலை பெப்ரவரி 6ம் திகதி வரை இப்பிரிவிலுள்ள 8 சுகாதார பரிசோதகர் பிரிவிலும் பகுதி பகுதியாக இடம்பெறும்,

இவ் வேலைகள் முடிவடைந்தபின் கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்காக கொழும்பிலிருந்து விசேட சாதனங்களுடன் மற்றொரு பிரிவினர் வர இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கட்டாக்காலி நாய்களையும், தடுப்பூசி ஏற்றாத நாய்களையும் பிடித்து அவற்றை ஒழிப்பதில் ஈடுபடுவார்கள்.



## தன்னலமற்ற பண்பாளர்

தன்னலமற்ற பண்பாளனும் பொதுநல நோக்கும்கொண்ட திரு. கீர்த்திசிங்கம் திடீரென மறைந்தது பேரிழப்பாகும். கடந்த மார்கழி மாதம் 20ம் திகதி நாற்பத்தாறே வயதுடைய திரு. கீர்த்திசிங்கம் ஒரு சில நாட்களே நோய்வாய்ப்பட்டிருந்து, அகாலமாக எம்மை விட்டுப் பிரிந்தார். இவரை அறிந்தவர்களுக்கு இவரது பிரிவு பேரிடியாக அமைந்தது. இன்று அன்னாரது அந்தியேட்டி, கந்தர்மடம் அம்மன் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறுகிறது.

யாழ்ப்பாணத்தில் சிறந்த சைவ மரபில் தோன்றிய விவசாயப் போதனாசிரியரான திரு. க. கனகரெத்தினம் தம்பதியினருக்கு கனிஷ்ட புதல்வராகப் பிறந்து ஆரம்பக் கல்வியை கொழும்பு சென். பீட்டர்ஸ் கல்லூரியிலும், பின்பு யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியிலும் கற்றார். கடந்த இருபது வருடமாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் கிளை முகாமையாளராகவும், பிராந்திய முகாமையாளராகவும், வவனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய காரியாலயங்களின் கடமையாற்றியுள்ளார். இறுதியாக யாழ்ப்பாணம் பிராந்திய அபிவிருத்தி முகாமையாளராக, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பதவி புரிந்தார்.

மாணவனாக இருக்கும் போதும், உத்தியோக ரீதியிலும் இவர் கடமை வீரராகவும், பண்புடைய கனவானாகவும் மதிக்கப்பட்டார். இவரது பேச்சுவன்மையால், நண்பர்களைப் பிணித்துக் கொள்ளல் இவருக்கு கைவந்த கலையாகும். இதன் காரணமாக காப்புறுதிக் கூட்டுத்தாபனம் பெரிதும் அபிவிருத்தியடைந்தது என்றால் மிகையாகாது.

உயர் கல்வி மாணவனாக இருந்தபோது மாணவர் சங்கங்களிலும், நாடக மன்றங்களிலும் பெரிதும் பங்குகொண்டுழைத்தார். பல தடவைகள் சங்கங்களின் தலைவராகவும், செயலாளராகவும் கடமையாற்றினார்.

றோட்டரிச் சங்கத்தில் இவர் ஆற்றிய சேவை அளப்பரியதாகும். றோட்டரிச் சங்கச் சஞ்சிகையின் பத்திராதிபராகவும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க உபதலைவராகவும், மட்டக்களப்பு அரசாங்க ஊழியர் சங்க செயலாளராகவும் தொண்டு புரிந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பொது சேவையிலும், தேசியப் பணியிலும் தன்னை அர்ப்பணித்த திரு. கீர்த்திசிங்கம் அவர்களின் இறுதியாத்திரையின்போது, அங்கு கூடிநின்ற மக்களின் கண்ணீர் அஞ்சலி பெரும் சோகமாகும்.

அன்னாரின் பிரிவினால் வாடும் மனைவி திருமதி திருநிலைநாயகிக்கும், மக்கள் சசிகலா, சந்திரிகா, மோகனதாஸ் மற்றும் உறவினருக்கும் இறைவன் ஆறுதல் அளிப்பாராக.

— உன் தோழன்.

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி:

# சந்தேக நபருக்கு தொடர்ந்து றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி சந்தேக நபர் தொடர்ந்து பெப்ரவரி 1ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டதுடன் அவரிடமிருந்த ஏழு பாஸ்போட்டுகளும் உரியவர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யுமாறும் மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிச்சம்பந்தம் தொடர்பாக கைதாகி றிமாண்டிலிருந்துவரும் வீமன்காமத்தைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சற்குணராஜா என்பவர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

அச்சமயம் இவரிடம் தமது பாஸ்போட்டுகள் சிக்கிக் கொண்டதாகவும் அவற்றைப் பெற்ற அவர் பின்னர் திருப்பித்தரவில்லையென்றும் ஏழு இளைஞர்கள் மல்லாகம் நீதிபதியிடம் முறையிட்டனர். பாஸ்போட்டுகள் இவர்களுக்கு அவசியம் தேவைப்படுவதால் அவைகிடைக்க வழி செய்யுமாறு இவர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் கோரினார்.

இதனையடுத்து இந்த பாஸ்போட்டுகள் எங்கே? என நீதிபதி கேட்டார். கொழும்பு ஹோட்டல் ஒன்றில் இருக்கும் சந்தேகநபரது பையில் இந்த பாஸ்போட்டுகள் இருப்பதாகவும் அதனை பொலிசார் தடுத்து வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து விசாரணை செய்த யாழ். பொலிசாருக்கு இதுபற்றி அறிவித்து அவர்களை சந்தேகநபரது பையைப் பொறுப்பேற்று அதனுள் உள்ள பாஸ்போட்டுகளை உரியவர்களுக்கு வழங்குமாறு நீதிபதி திரு. சி. வி, விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் சந்தேகநபரை பெப்ரவரி 1ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

# "சிங்கப்பூரில் எமது இளைஞர்கள் கஷ்டம் அனுபவிக்கின்றனர்"

## நாடுதிரும்பிய இளைஞர் தகவல்

(கரவெட்டி)

''சிங்கப்பூர் சொர்க்கபுரியாக விளங்குகின்ற போதிலும், அங்கு தொழில் நாடிச் செல்லும் எம்மவர்க்கு அது 'சொர்க்கத்தை' அள்ளி வழங்குவதில்லை. எவ்வளவு கஷ்டங்கள் இன்னல்கள் மத்தியில் மிதமிஞ்சிய வேலைப்பளுவுடன் காலம் தள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் எம்மவர் உள்ளனர்''

இவ்வாறு சிங்கப்பூருக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்று ஏமாற்றத்துக்குள்ளாகித் திரும்பிய திரு. எஸ். குலநாயகம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

சிங்கப்பூரில் எட்டுமணித்தியாலங்கள் தொடர்ந்து கட்டாயம் வேலை செய்தே தீரவேண்டும். இந்த எட்டுமணித்தியால வேலை நேரத்தில் ஒய்வு என்பதற்கு இடமே இல்லை.

பெண்கள் அங்கே கூடுதலாகக் கஷ்டம் அனுபவிக்கின்றனர்.

''சிங்கப்பூர் செல்வதற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட சம்பளம் அங்கே சென்ற பின்னர் கிடைப்பது இல்லை, மிகவும் குறைந்த அளவிலான சம்பளமே வழங்கப்படுகின்றது. இதனால் அங்கு வேலை செய்யமுடியாத நிலையிலேயே நான் ஊர்திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது.

''அதிக பணத்தைச் செலவழித்து சிங்கப்பூர் செல்பவர்கள் எனது அனுபவத்தை உணர்ந்தால் உள்ளூரிலேயே தமது தொழில் வாய்ப்பை நிலை நிறுத்திக் கொள்ள முடியும்'' என்றார். (வெ)

### கத்தி வெட்டுச் சம்பவம்:

# சந்தேகநபரை மக்கள் மடக்கிப் பிடித்தனர்

(சாவகச்சேரி)

முத்துக்கறுப்பன் மாரிமுத்து என்பவர் இயக்கச்சியில் கத்தியால் வயிற்றில் வெட்டித் தாக்கப்பட்டார்.

சந்தேக நபர் பொன்னுத்துரையை அவ்வீதியால் வந்தவர்கள் பிடித்து அவ்வழியால் வந்த இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

காயக்காரரை சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதித்த இராணுவத்தினர் சந்தேகநபரைப் பொலிசில் ஒப்படைத்தனர்.

விசாரணையை நீதிமன்ற உத்தியோகத்தர் எஸ். செபஸ்தியாம்பிள்ளை மேற்கொண்டுள்ளனர். (க)

# பொலிஸாருக்கு டெலிவிஷன்

(வவனியா)

அனுராதபுரத்தில் பெப்ரவரி 4ல் நடைபெறவிருக்கும் சுதந்திரதின கொண்டாட்ட வைபவத்தின் பாதுகாப்பு விடயங்களைக்கவனிக்க வந்த பொலிஸ் மா அதிபர் திரு, அனா செனவிரத்ன — வவனியாவுக்கும்விஜயம் செய்தார்

வவுனியா பொலிசாரின் சேவையைப் பாராட்டியதுடன், நலமும் விசாரித்தார். பொலிஸாரின் பொழுதுபோக்கு அறைக்கு, 'டெலிவிஷசன் செட்டும்' தருவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

# இனிமேல்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சேரிப் பொலிசாரினால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இருதரப்புச் சட்டத்தரணிகளும் வழக்கை இணங்கச் சம்மதம் என வாதி தரப்புச் சட்டத்தரணி சி. பாலகிருஷ்ணர் குறிப்பிட்டு நட்டஈடுகோரினார்

நீதிபதி எம். எம். காரியப்பர் இதனை ஏற்றுக்கொண்டு நட்டஈடாக ரூபா 300 வாதிக்குச் செலுத்தும்படி பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டார்.

நீங்கள் முன்னரும் ஒரு முறை வாதியைத் தாக்கியதாகத் தெரியவருகிறது என்றும் அப்படியிருந்தும்வாதிவழக்கை இணங்கச் சம்மதம் தெரிவித்திருப்பதால் அதிஷ்ட வசமாக நீங்கள் தப்பிச் செல்கிறீர்கள் என்றும் இனிமேல் நீதிமன்ற பக்கம் உங்களைக் காணக் கூடாது என்றும் எச்சரித்தார். (க)

Thultex

துல்ரெக்ஸ் தனது புதிய எதிர்காலத்தில் பங்கெடுக்க விற்பனையாளர்களை அழைக்கிறது.

## எம்மைப்பற்றி...

வியந்திடும் புதுமையின் முதற்படியாக இப்பொழுது துல்ரெக்ஸ் இந்தியாவின் பொம்பே டையிங் ஸ்தாபனத்தின் புதிய சுறுசுறுப்பான நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது.

வெகுவிரைவில் நாம், பரந்த அளவில் பல்வேறு வகையான உயர்ரக புடவைகளை வெளியிடவிருக்கிறோம்.

## ...உங்களுக்கு

நீவடங்கிய எமது புதிய சில்லறை விற்பனை வலையமைப்பிற்கு உங்களைப் போன்ற வியாபாரிகளைத்தேடுகிறோம்.

பின்வரும் வசதிகள் கொண்ட விற்பனையாளர்கள் நாடு முழுவதும் தேவைப் படுகிறார்கள்.

★ விற்பனை நிலையங்களுக்கருகில் நகரில் பண்டகசாலை வசதிகள்.

★ மூலதனத் தொழிற்பாட்டிற்கான மூலதன வசதிகள்.

அதிக லாபம் வழங்கும் நல்லதொரு வாய்ப்பு இது.

எனவே,
தயவு செய்து, உங்களைப் பற்றியும் உங்கள் பண்டகசாலை வசதி, முதலீட்டு வசதி ஆகியவற்றையும் குறிப்பிட்டு உடன் எழுதுங்கள்.

OVER 100 YEARS OF EXPERIENCE FROM BOMBAY DYEING

துல்கிரியா ரெக்ஸ்ரைல்ஸ் மில்ஸ்
195/1, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு - 4.

HTL TT 122

# "இசையுலகுக்குப் பேரிழப்பு"

(சாவகச்சேரி)

''எமது தொகுதியிலுள்ள கலைஞர்களின் மிகவும் முதிர்ந்த ஒரு இசைக்கலைஞர் அமரர் நடேசனுவார். இவர் எமது தொகுதியைப் பிறப்பிடமாகக் கொள்ளா விட்டாலும் எமது தொகுதியின் கலைவளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டுழைத்துவந்தார்.

கடந்த 30 ஆண்டுகட்கு மேலாக இசையை ஈழத்தின் எத்திசையிலும் பரப்பி வந்தவர். எங்கெங்கு திறமையான கலைஞர்கள் இருக்கிறார்களோ அவர்களை வரவழைத்து எம்மையெல்லாம் மகிழவைத்தார், இவரின் மறைவு இசையுலகுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.''

இவ்வாறு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக இசையாசிரியராககவிருந்த இசைமணி அமரர் நடேசனின் இறுதிச்சடங்கில் உரையாற்றி அஞ்சலி செலுத்துகையில் சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. ஞானச்சந்திரன், யாழ். வட்டாரக்கல்வியதிகாரி திரு. கணபதிப்பிள்ளை, திரு. கே. குமாரசாமி. திரு. ஏ, எஸ். இராமநாதன். திரு. பொன். சுந்தரலிங்கம், சட்டத்தரணி எஸ். கே, திரவியநாயகம், திரு. க. பாலச்சந்திரன், சட்டத்தரணி செ. அம்பிகைபாலன், திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் ஆகியோர் உட்படப் பலர் உரையரற்றினர்.

# 'தொண்டா'வை சந்தித்துப் பேசுவர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கால்நடை வளர்ப்போர், பொற்தொழிலாளர் ஆகியோர் எதிர்நோக்குகின்ற பிரச்னைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபை நிறைவேற்றுக் குழுவினர் எதிர்வரும் 22ம் திகதி வெளிக்கிழமை கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு சௌ. தொண்டமானை அவரது அமைச்சில் உயர் அதிகாரிகள் சகிதம் சந்திக்கின்றனர்.

இக்குழுவில் மட்டக்களப்பு மாவட்ட மந்திரியும் பிரதி தபால் தொலை தொடர்புகள் அமைச்சர் ஜனுப் அப்துல் மஜீத், மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சீ. சம்பந்தமூர்த்தி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யு. தேவநாயகம், பட்டிருப்பு எம். பி. திரு. பூ.கணேசலிங்கம் ஆகியோர் அடங்குவர்.

# விவசாயம் பாதிப்பு

(சாவகச்சேரி)

முரசுமோட்டை பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பிரிவிலுள்ள புலிங்கதேவன் முறிப்பு என்னுமிடத்திலுள்ள விவசாயிகளுக்கு ஓர்கழிவுவாய்க்கால் இல்லாமையினுல் அவர்களுடைய விவசாயம் பாதிப்படைந்துள்ளது.

இப்பகுதி விவசாயிகள் பலரும் எடுத்துக் கொண்ட முயற்சியினுல் யாழ்ப்பாணம் கமத்தொழிற்சேவைத் திணைக்களம் சுமார் 20, 000 ரூபாவுக்கு மேற்செலவு செய்து 'பொக்கன் குளம்' என்னும் கழிவு வாய்க்காலை அமைத்துக் கொடுத்துள்ளார்கள்.

இதனுல் இப்பகுதி மக்கள் இம்முறை அமோக விளைச்சலைப் பெறக்கூடியதாக இருக்கிறது. கமத்தொழிற் திணைக்களத்திற்கு விவசாயிகள் மகஜர் மூலம் தம் பாராட்டைத் தெரிவித்துள்ளார்கள். (க)

# கோம்பைக் குவியலுக்குள் துப்பாக்கி இருந்தது
## பொலிஸ் அதிகாரி சாட்சியம்

(சாவகச்சேரி)

1981—ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ம்திகதி எனக்குக் கிடைத்த ரகசியத் தகவலின் படி வேளாவள்ளம் பழைய வாய்க்கால் என்னுமிடத்திற்கு சென்று சந்தேகநபர்கள் நால்வரும் குடியிருக்கும் வீட்டைப் பரிசோதனையிட்ட பொழுது கோம்பைக் குவியலுக்குள் தனிக்குழல் துப்பாக்கிஒன்றும் 5தோட்டாக்களும் இருக்கக் கண்டேன்''

சட்டவிரோதமாகதுப்பாக்கி வைத்திருந்தார்களென குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் சாவகச்சேரிபொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தென்னக்கோன் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எம். காரியப்பர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில்,வேளாவள்ளம் பழைய வாய்க்காலில் சட்டவிரோதமாக துவக்குகள் வைத்திருந்தார்களென சகோதரர்களான சி.சிவராசசிங்கம், சி. சிவராசரத்தினம், சி. சிவஞானம், சி சிவகுமார் ஆகியோருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அடையாளங்களோடு கைப்பற்றிய துவக்கு தோட்டக்கள் என்பவற்றை அரசாங்க இரசாயன பரிசோதனைக்கு அனுப்பும்படியும் மார்ச்மாதம் 10ம் திகதிக்குமுன் அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் நீதிபதி உத்தரவிட்டார். [க]

# களவுகளை முறியடிக்க தொண்டர் படை

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டிப் பகுதியில் களவுகள், கொள்ளைகள் அதிகரித்து வந்ததனுல் குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் 50க்கு மேற்பட்ட தொண்டர்களைக் கொண்ட காவல் படையை நிறுவி உள்ளது.

இம்முயற்சியை பொலிஸார் பாராட்டியதுடன் பூரண ஒத்துழைப்பும் வழங்க முன்வந்துள்ளனர் என்றும்—

தொண்டர்படையினர் தங்கள் பணியைத் தொடங்கிய ஓரிரு நாட்களிலேயே ஆயுதங்களுடன் கொள்ளையடிக்க வந்ததாக கருதப்படும் நால்வரில் இருவரைப்பிடித்து காங்கேசன்துறை பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர் என்றும் மேற்படி சங்கத் தலைவர் திரு.பொ. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார். (இ)

# 2 கடைகளை உடைத்து கொள்ளை இருவர் றிமாண்டில்

(யாழ்ப்பாணம்)

இரு கடைகளை உடைத்து கொள்ளை அடித்த இருவரை யாழ்.பொலிசார் கைதுசெய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

யாழ். நீதிமன்ற நீதவான் திரு. ரி. ஜோகநாதன் இருவரின் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும்படியும், அடுத்த மாதம் 2ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படியும் உத்தரவிட்டார்.

யாழ்ப்பர்ணம் பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த அருளப்பு ஜெரி ஒலிவர், குருநகரைச் சேர்ந்த ஜோசப் ராசன் ஆகிய இருவருமே றிமாண்டில் வைக்கப்பட்டவர்களாவர்.

இவர்களிருவரும் யாழ்ப்பாணத்திலுள்ள கடை ஒன்றை உடைத்து 2420 ரூபா பெறுமதியான புடவைகளையும், அரியாலையிலுள்ள சின்னத்தம்பி சந்திரசேகரி என்பவரின் கடையை உடைத்து 3250ரூபா பெறுமதியான பொருட்களையும் கொள்ளையடித்ததாக வழக்கு தொடரப்பட்டுள்ளது. (மா)

# முதலாவது ஆண்டுவிழா

(வவுனியா)

மன்னுர் மறைமாவட்ட முதலாவது ஆண்டு நிறைவு தினவிழா இம்மாதம் 24ம் திகதி தோட்டவெளியிலுள்ள வேதசாட்சிகள் ஆலயத்தில் நடைபெறும் திருவழிபாடுகள் மன்னுர் மறைமாவட்ட ஆயரால் நடாத்தப்படும். [க]

# புதிய பாடசாலை அமைக்க அமைச்சர் 'ராசு' உதவி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கல்லடி வேலூர் குடியேற்றத் திட்டத்தில் புதிதாக கல்வி திணைக்களத்தினுல் ஆரம்பப்பாடசாலை ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இக் குடியேற்றத் திட்டத்தில் ஏற்கனவே ஒரு பாசாலை அமைக்கப்படாமையினுல் இப்பகுதி மாணவர்கள் அருகாமையிலுள்ள பகுதி பாடசாலைகளுக்கே தற்போது சென்று வருகிறுர்கள்.

இதனை மேற்படி கிராம மாதர் அபிவிருத்தி சங்க பிரமுகர் திருமதி. அ. தங்கத்துரை பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ, இராசதுரையின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து இதற்கென அமைச்சர் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார். இதன் பிரகாரம் அமைச்சர் எதிர் வரும் 22ம் திகதி அடிக்கல் நாட்டி வேலையை ஆரம்பித்து வைப்பார்.

## கோவில் ஓடு திருட்டுவழக்கு நீதிமன்றம் வராத 1ம் எதிரிக்கு வாரண்ட்!

]சாவகச்சேரி]

கோவில்மட ஓடு திருட்டு வழக்கில் 1ம் எதிரி கோர்ட்டிற்கு வராததினுல் அவருக்கு வாறண்ட் பிறப்பிக்கப்பட்டது.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எஸ். யேசுதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் கொடிகாமம் கட்டைபறித்தால் கோவில் மட ஓடுகளை அபகரித்ததாக கந்தையாவேலாயுதம், செல்லையா தர்மலிங்கம் ஆகியோரா் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி கந்தையா வேலாயுதம் நீதிமன்றம் வராததினுல் அவருக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

லொறிஉரிமையாளர் கோர்ட்டிக்குச் சமுகமாயிருந்தார். நீதிபதி திரு. எஸ். யேசுதாசன் அவரை எச்சரித்து இந்த மாதம் 20ம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார், [க]

வெஸ்லி மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9. 30
பட்டாக்கத்தி பைரவன்

6 வது-மகளிர் வாரம்
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
நீல மலர்கள்

லிடோ யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பூநகரி

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
அன்னப்பறவை

ராணி (யாழ். நகர்) 2-வதுஜனத்திரள் வாரம்
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
சிவாஜி லட்சுமி
தங்கைக்காக

றீகல் (யாழ். நகர்) தினசரி 10—30, 2—00, 4—30, 7—00, 9—30
Special Delivery
(Action Film)
22 — 25
Dammtion Aliey

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி10—30, 2—30, 6—30, 9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ராஜா (யாழ். நகர்) சரஸ்வதி [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த், படாபட், தேங்காய் சினிவாசன்
6 இருந்து 60 வரை
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) 10—30, 2—30, 6—15, 9—45
126வது வெற்றித் தினம்
கமல் ஸ்ரீதேவி
குரு
பரபரப்பூட்டி காட்சியளிக்கும் கடைசி வாரம்!

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:30, 6:15, 9:30
யாழ். நகர்
கமலஹாசன் ஸ்ரீதேவி (இருவேடம்) நடித்த
கல்யாண ராமன்
(புதிய பிரதி)

## திருவசகத்தை உருகிப் பயில வண்டும்

(மாவிட்டபுரம்)

''திருவாசகம் நாம் உணர்ந்து ஓதுவதற்குரியதேயன்றி பேசப்படுவதற்கல்ல, திருமுறைகளுள் சிறந்ததோர் இடத்தை வகித்து தனித்துவத்துடன் திகழ்வது திருவாசகம். மானிடப்பிறவியின் நோக்கத்தை உணர்த்தும் திருவாசகத்தை நாம் மனம் உருகிப் பயிலவேண்டும். அதன் மூலமே இறைவனை அடைய முடியும்''

இவ்வாறு வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற விழாவில் சிறப்புரையாற்றிய விரிவுரையாளர் திரு. ச, விநாயகமூர்த்தி கூறினுர்.

அவர்மேலும் கூறியதாவது: திருவாசகத்தின் பொருளாக பரம்பொருளான ஆண்டவனே இருக்கும்போது அதன் மகிமை சொல்லக்கூடியதன்று. கல் போன்ற மனதை இளகச்செய்யும் சக்தி திருவாசகத்திற்கு உண்டு. திருவாசகம் ஓதுதல், அதன் பயனை உணர்ந்து தெளிவு பெறுதல் என்பவற்றில் நாம் கவனம் செலுத்த வேண்டும்'' என்றுர்.

## ஆசிரிய பயிற்சியினுல் திறமையை அறியலாம்

(பச்சிலைப்பள்ளி)

''ஆசிரிய கலாசாலை பயிற்சியை முடித்துக் கொண்டு சேவைக்குச் செல்கின்ற ஆசிரியர்கள் பல்திறனுள்ளவர்களாகத் திகழவேண்டும்.''

கோப்பாய் ஆசிரியகலாசாலைக்குப் புதிதாக சமூகமளித்த மாணவ ஆசிரியர்களை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர்திருமதி ஆனந்தகுமாரசாமி வரவேற்றுப் பேசும் போது கூறினுர்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது: இவ்வருடத்திலிருந்து ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து பயிற்சியளிக்கும் முறை வந்ததினுல் ஆசிரிய மாணவர்களின் திறமையை அறியக்கூடியதாக இருக்கும்,

இக்கல்லூரியின் பாரம்பரியம் தமிழ் பண்பாடு என்பனவற்றைப் பேணிப்பாதுகாத்து நல் ஆசிரியர்களாக சமுதாயத்திற்குச் சேவையாற்ற வேண்டும்,

இக் கல்லூரியில் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளி மாவட்டங்களில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களின் திறமைகள் வட்டாரக் கல்வி அதிகாரிகளால் பாராட்டப்படுவதை நான் அறிவேன்.

இவ் வைபவத்தில் செல்வி சின்னப்புவும் உரையாற்றினுர். (க)

## சத்தியப் பிரமாணம் செய்தார்

(நயினுதிவு)

நயினுதீவைச்சேர்ந்த சைவப் புலவரும் பாடசாலை அதிபருமாகிய திரு. நா. விசுவலிங்கம் யாழ்ப்பாண மாவட்ட மேல் நீதிமன்ற நீதியரசர் முன்னிலையில் யாழ்ப்பாண மாவட்டப் பிரசித்த நொத்தாரிசுவாகச் சத்தியப் பிரமாணஞ் செய்து பதவி ஏற்றுர். நயினுதீவில் நிரந்தரமாகத் தங்கியிருந்து நொத்தாரிசுவாகஇவர்கடமை புரிவார்.

## இன்றைய பலன்

தை மாதம் 8ம் திகதி
வியாழக்கிழமை
(21—1—82)

மேடம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும், உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள், அரச பயத்துக்கிடமேற்படுமாகையால் வழக்குவிவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும், அமைதி நன்று.

இடபம்: களஸ்திரவழியால் கனிவான சம்பவங்களுக்கு இடமுண்டு, வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும், இணைந்த இதயங்கள் இன்பத்தில் மிதக்கும், பொருள் வரவிலும் திருப்திகரமானநிலை தென்படும்.

மிதுனம்: விபத்திற்கு இடமேற்படும், எதிலும் நிதானத்துடன் நடந்துகொள்ளவும், பல வழிகளிலும் பணம் செலவாகும், சிலர் கடன்படவும் நேரிடலாம், எதிரிகளின் அட்டகாசம் அதிகரிக்கும்.

கடகம்: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும், தெய்வத்தின் அருளும் உண்டு, இலட்சியப் பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும், நீண்ட நாள் நண்பரைச் சந்திப்பீர்கள், கணவன் மனைவி உறவு நெருக்கமாக இருக்கும்.

சிங்கம்: உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும், உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள், உவகைசேரும்.

கன்னி: எதிர்பாராத பொருள் வரவும் பொதுசன மதிப்பும் இன்று கிடைக்கலாம், நன்மையான காரியங்களில் பணச் செலவு ஏற்படும், டாக்டர்கள் தொழிலில் பிரகாசிக்க முடியும்.

துலாம்: எவ்விஷயத்திற்கும் நன்றுக ஆலோசித்த பின் பே முடிவெடுக்கவும், ஆணவப் போக்கு மற்றவர்களின் எதிர்ப்பைத் தேடித்தரும், முகமன் கூறுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

விருச்சிகம்: பூசலின் மூலம் இதயபாரம் ஏற்படும், திடீர் முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள், எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றின் நிலைமையைச் சமாளிக்க முடியும், சுமாரான தினம்.

தனு: சிக்கல்களை மேற்கொள்வதற்குச் சிறந்த நடவடிக்கை எடுப்பீர்கள், குடும்பத்தில் பொறுப்புணர்ச்சி அதிகரிக்கலாம், எதையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுவீர்கள்.

மகரம்: தொடங்கியவிடயம் பாதியில் தடைப்படும் இதனுல் பொருள் விரயத்துக்கும் இடமேற்படும், குடும்பத்தில் உடல் நலக்குறைவு தோன்றும், உணவு சம்பந்தமாக சுகாதாரம் வேண்டும்.

கும்பம்: அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம், பொருள் வரவிற்கும் இடமுண்டு, சிறப்பானதினம்.

மீனம்: பணநெருக்கடி விலகுவதற்கான அறிகுறிகள் தென்படும், புத்திரவழியால் உதவியும் கிடைக்கும், செவிக்கு இனிமைதரும் செய்தியும் வந்துசேரும், பயணமும் மேற்கொள்ளப்படலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## வைத்திய அதிகாரி இல்லை

(பச்சிலைப்பள்ளி)

பளை அரசினர் வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி பதவி தொடர்ந்தும் காலியாகவுள்ளதினுல் இப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் நீடிக்கின்றன.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் டாக்டர் கே. சிவபாலன் என்பவர் மாவட்ட வைத்திய அதிகாரியாக சில மாதங்கள் கடமையாற்றினுர். அவர் பதவியுயர்வு பெற்றுச் சென்றதையடுத்து அப்பதவி தொடர்ந்தும் காலியாகவுள்ளதாம்.

## சகாய வேலை கொடுப்பனவுகள்

(வவனியா)

வவனியா மாவட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்ற சகாயவேலைக்குரிய கொடுப்பனவுகள் யாவும் இவ்வாரத்துக்குள் நிவர்த்தி செய்யப்படுமென அரசாங்க அதிபர் கே. சி. லோகேஸ்வரன் தெரிவித்தார்.

அநேகமாக கொடுப்பனவுகள் யாவும் மாவாகவும், பணமாகவும் வழங்கப்படும். முன்னர் நடைபெற்ற சகாய வேலை கொடுப்பனவுகளில் மோசடி செய்ததாக மூன்று அரசாங்க உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாகத் தெரியவருகின்றது,

# வரி விளம்பரம்

## தேவை

தொழிற்சாலை உதவியாளர் (ஆண்களும் பெண்களும்), கட்டட மேற்பார்வையாளர், மேசன், தச்சுத்தொழிலில் அனுபவம் உள்ளோர் மற்றும் உதவியாளர் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2033, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். (2033)

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலுக்குக் குருக்கள் ஒருவர் தேவை. நற்பண்பும், ஆரோக்கியமும் உடையவராயும் சுமார் 55 வயதிற்குட்பட்டவர் விரும்பத்தக்கது: தங்குவதற்கு வசதியான வீடும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும். விண்ணப்பங்கள் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களுடன் (பிரதிகளுடன்) 30 1 82க்கு முன் சிவசோதி, 5, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம் என்று விலாசமிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். நேரடித் தொர்டர்புகள் தவிர்க்கப்படல் வேண்டும். (2023)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 5 ஸ்ரீ 8297 இலக்கமுடைய லம்பிரட்டா 150 C C ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு, வி. நடராஜா, 'கவிதவாசா', கால்வாய், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. (2030)

## வகுப்பு

எயர் கொண்டிசனிங் அன் ரெப்பிறிஜிறேசன் செய்முறைப் பயிற்சிகளுடன் 1-2 82இல் வகுப்புகள் ஆரம்பம். Auto Cool Engineers (சாந்தி சினிமா முன்பாக) கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம். (2026)

கம்பியூட்டர் புரெகிராமிங் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. எங்கள் நிறுவனத்திலுள்ள கம்பியூட்டர் இயந்திரத்தில் செய்கை முறைப் பயிற்சிகளும் (செய்முறை பயிற்சி) அளிக்கப்படுகின்றன. இருபாலாரும் கற்கலாம். புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 23-01 82. விபரங்களுக்கு: Auto Cool Engineers (சாந்தி தியேட்டருக்கு முன்பாக) கந்தப்ப சேகரம் வீதி, யாழ்ப்பாணம். (2028)

## அரசின்...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

காக பத்து லட்சம் ரூபா நன்கொடையளிக்க இருக்கிறார்களாம். எனவே இந்நிலையில் மேற்கொண்டும் கொடை கொடுக்க இத் தனவந்தர்கள் சம்மதிப்பார்களா எனவும் கேள்வி எழுப்புகிறார். இது இத்தனவந்தர்களின் நல்ல நோக்கத்துக்கு மாசுகற்பிப்பதாக அமைகிறது.

[illegible] தானங்களில் சிறந்தது கல்விதானம், அத்தானத்தை அளிப்பவர்கள் ஒரு பகுதியினருக்கோ அல்லது ஒருகுறிப்பிட்ட இனத்துக்கோ நன்கொடையளிப்பதில்லை. கல்விக்காக கொடைகொடுக்கிறோம் என்ற பொதுவான நல்ல எண்ணத்தோடுதான் நல்ல மனம் படைத்த பெரியோர் நன்மை செய்து தான் போய்ச்சேரும் இடத்து பலனைப்பெற விரும்புகிறார்கள் இதைத்தான் எம்பெருமானார். (ஸல்) அவர்கள் கதீஸில் இப்படிக் கூறுகிறார்; அதாவது கல்விக்காக ஒரு மனிதன் செலவு செய்யும் பொருள் அம்மனிதனை சொர்க்கத்தில் கொண்டு சேர்த்து விடும்'' என மிக அழகாகக் கூறியிருக்கிறார்கள். இதிலிருந்து மாணவரின் அறிவு வளர்ச்சிக்காக நன்கொடையளிக்கும் தனவந்தர்கள் எந்நிலையிலும் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். எனவே இக்கொடை வள்ளல்களின் உதவி பின்தங்கிய கொத்தணிப் பாடசாலைகளுக்குக் கிடைக்காமல்போய் விடுமோ என ஐயப்படத் தேவையில்லை.

# இளம் விவசாயி நஞ்சருந்தி மரணம்

(சாவகச்சேரி)

மூன்று மாதத்திற்கு முன்னர் தற்கொலை செய்யமுயன்று தோல்விகண்ட இளைஞர் தற்கொலை செய்துகொண்டார்.

கைதடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வரத்தினத்தின் (வயது 26) மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

சாவகச்சேரிமரணவிசாரணை அதிகாரி திரு என். ர்மேந்திரன் மரண விசாரணை நடத்தினர்.

மரணவிசாரணையில் இவர் ஒரு இளம் விவசாயி என்பதும் காணிப்பிரச்னை சம்பந்தமாகத் தமது சுகப்பன் சகோதரர் என்பவர்களோடுவாக்குவாதப் பட்டதாகவும், நீர்இறைக்கும் யந்திரம் வாங்கும் விடயமாகவும் பிரச்னை எழுந்ததாகவும், இவர் கிருமிநாசினி அருந்தியதாகவும் தெரியவந்தது. இவர் திருமணம் செய்து எட்டு மாதத்திற்குள் இக்கதிக்காளாகியுள்ளாரெனவும் மூன்று மாதத்திற்கு முன்னரும் தற்கொலைசெய்ய முயன்றுள்ளார் என்பதும் தெரியவந்தது. சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன் மு. கந்தையா, கிராம சேவையாளர் எஸ். மார்க்கண்டு என்போர் காலஞ்சென்றவரின் மனைவி சௌந்தலாதேவி தகப்பன் சுப்பிரமணியம் மனைவியின் தகப்பன் அரியகுட்டி என்பவர்களின் சாட்சியங்களை நெறிப்படுத்தினர்.

இச்சாட்சியங்களைப் பதிவு செய்தபின் மரண விசாரணை அதிகாரி என். தர்மேந்திரன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (க)

# ஐந்து கழகங்கள்

## பங்குபற்றிய விளையாட்டுவிழா

(மண்டைதீவு)

காரைநகர் களபூமி சனசமூக நிலையத்தின் ஆதரவில் கடந்த இரண்டு வாரங்களாக இப்பகுதியிலுள்ள ஐந்து விளையாட்டு கழகங்களின் சார்பில் பத்து விளையாட்டு குழுக்கள் பங்கு பற்றிய மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி காரைநகர் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

காரைநகர்சிவப்புக்குழு விளையாட்டுக்கழகம் வியாவில் விளையாட்டு கழகத்தை 8—0 கோல்களாலும் சோலையான் விளையாட்டு கழகத்தை 5—0 கோல்களால்வெற்றிபெற்றது.

காரைநகர் மஞ்சள் குழு கோவளம் விளையாட்டு கழகத்தை 2—1 கோல்களாலும் நீரிபந்தனை அம்பாள் விளையாட்டு கழகத்தை 2—1 கோல்களால் வெற்றியீட்டியது.

சோலையான் விளையாட்டுக் கழகம் சீ. கோஷ்டியை 5—1 கோல்களால்வெற்றிபெற்றது,

இப்போட்டியின் முதலாம் இரண்டாம் இடங்களுக்கான இறுதிபோட்டி நடைபெற்ற போது சிவப்புகுழு மஞ்சள் குழுவை 2—1 கோல்களால் தோற்கடித்தது.

மூன்ருவது இடத்துக்கான போட்டியில் காரை விளையாட்டுக்கழக பச்சைக்குழு சோலையான் விலையாட்டு கழக ஏ குழு பங்குபற்றி சோலையான் குழு 4—1 கோல்களால் வெற்றி பெற்றது.

மேற்படி போட்டியில் வெற்றிக் பெற்றவர்களுக்கான வெற்றி கேடயம் இம்மாதம் இருபத்திமூன்ரும் திகதி சனிக்கிழமை நடைபெறும் பொங்கல் விழாவில் வள்ங்கப்படவிருக்கின்றது.

விழா இறுதியில் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

# பின் முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

முூ க முத்துக்குமார்,
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

வல்வெட்டி பழவத்தையைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை முருகுப்பிள்ளை கைம்பெண் பாறுபதிப் பிள்ளை என்பவரது மரண சாதனமில்லா சொத்து விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் 1133

முருகுப்பிள்ளை ஸ்ரீசற்குருநாதன், பழவத்தை, வல்வெட்டி.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிட்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின் முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1982—ம் ஆண்டு மாசி மாதம் 26—ந் திகதியன்று முற்பகல் 9 00 மணிசகு இந்தந்திமன்றின் முன்னர் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்..

இன்று 1982 ம் ஆண்டு தை மாதம் 15-ந் திகதி

நீதிமன்றின் கட்டளைப்படி

க. செல்வராஜா,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.

வரைவு;

மூ. க. முத்துக்குமார்.
மனுதாரின் சட்டத்தரணி.
(2029)

# வாசிகசாலையும் கோயிலும் கிராமத்திற்கு இன்றியமையாதவை

(யாழ்ப்பாணம்)

வாசிகசாலையும், கோயில்களும் ஒருகிராமத்திற்கு மிகவும் இன்றியமையாதவை என்று, ஐயனார் கோவிலடி சனசமூக நிலைய பொங்கல்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய கலாநிதி திரு. தி. கங்காதரன் கூறினார்.

பொங்கல் விழாவும், புதிய கட்டடத் திறப்புவிழாவும் நிலையத்தலைவர் திரு. இ. சிவசோதி தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினர்களாக கலாநிதி தி. கங்காதரனும், சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசாவும் கலந்துகொண்டனர்.

புதிய கட்டடத்தை கலாநிதி தி. கங்காதரன் திறந்துவைத்தார். சிவதர்மவள்ளல் க. கனகராசா குத்துவிளக்கேற்றி வைத்துப் பேசுகையில் சைவமும் தமிழும் வளர இச் சனசமுக நிலையம் தமது கடமையைச் சரிவரச் செய்யவேண்டும் என்று கூறினர்.

தலைவர் தமது பேருரையில் பொங்கலின் மகத்துவத்தை விளக்கிகூறி அது ஒரு வீரம் செறிந்த நாளாக கொண்டாட வேண்டும் என்றார். நிலையத்தின் செயலாளர் திரு. நடேசகுமார் நன்றி கூறினர். (க)

## ஆசிரியர்கள் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் கடமையாற்றிய நான்கு ஆசிரியர்கள் இம்மாதம் தொடக்கம் வேறுபாடசாலைகளுக்கு கல்வித்திணைக்களத்தினல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆங்கில ஆசிரியர் திரு. குலசிங்கம், விஞ்ஞான ஆசிரியர் திரு. மகேந்திரன், விஞ்ஞான ஆசிரியை திருமதி புஷ்பமலர் சந்திரமோகன், வர்த்தக ஆசிரியர் திரு. த. அருணசலம் ஆகியோரே இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களாவார். (அ)

## செட்டிகுளத்தில்..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சிகளும் நடிகருக்கு அவசியம் என்பதை பயிலுனர் நன்ருக உணரக்கூடிய மு[illegible] தெளிவாக்கப்பட்டது. இந்த நோக்கம் நிச்சயமாகப் பயிற்சியாளர் மத்தியில் தெளிவாக்கப்பட்டது இப் பிரதேசத்தில் மாத்திரமல்லாது இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் இம்வாருன மேடை நாடகப் பயிற்சிகள் நடைபெறுமாயின் மேடை நாடகத்திஞல் நலிவுறும் கலைஞர்களுக்கும் சுவைஞர்களுக்கும் பெரும் உற்சாகம் நிச்சயமாக அமையும்.

## கவிஞருக்கு அஞ்சலி

[மாவிட்டபுரம்]

குப்பிளான் லெனின் சனசமூக நிலையம் கவிஞர் கண்ணதாசனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

மேற்படி நிலையத்தின் கூட்டமொன்று நிலைய மண்டபத்தில் திரு,எஸ்.பாலசுப்பிரமணியம் தலைமைறில் நடைபெற்ற சமயமே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிலையத்தின் பொதுக்கூட்டத்தை விரைவில் நடத்துவது உட்பட மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## பழையமாணவர் சங்கக்கூட்டம்

(அரியாலை)

யாழ். பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இம் மாதம் 30ம் திகதி கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. யே. ரி. செல்லையா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பரி. யோவான் ஆலயத்தில் காலை நடைபெறும் திருநற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமாகும் இவ்வருடாந்த விழாவில் பழைய மாணவருக்கும் தற்பொழுது கல்விகற்கும் மாணவருக்குமிடையிலான கிரிக்கட், உதைபந்து விளையாட்டுக்களும் மதிய போசனமும் நடைமெறும்.

மாலைகல்லூரிஅதிபர்திரு.சீ. ஈ. ஆனந்தராஜனுலும்,அவரது பாரியாராலும் பழைய மாணவர்களுக்கு அளிக்கப்படும் தேநீர் விருந்துபசாரத்துடன் விழா முடிவடையும். வருடாந்தக கூட்டத்தில் புதிய வருட நிர்வாகிகள் தெரிவு[illegible] நடைபெறு[illegible].

## பாஷையூரில் உதைபந்தாட்ட போட்டி

(அரியாலை)

பாஷையூர் ஒலிம்பிக்ஸ் கோஷ்டியினரின் ஆதரவில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஜனவரி மாதம் 21ம் 22ம், 23ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

# கைப்பற்றப்பட்ட வெடிகள் மயானத்தில் வெடித்தன!

[நயினதீவு]

விற்பனையாகாமல் கடைகளில் இருப்பில் இருந்த வெடிப்பைக்கற்றுகள் யாவற்றையும் கடற்படையினர் கைப்பற்றிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தைப்பொங்கல் தினத்தின் பின் நயினதீவில் இடம்பெற்றுள்ளது.

உத்தேச தமிழ் ஈழப் பிரகடனத்தையொட்டி யாழ் மாவட்டத்தில் வெடி விற்பனை கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இதனல் பெருந்தொகையான வெடி கையிருப்பில் இருந்ததாகவும் அவற்றையே கடற்படையினர் எடுத்துச் சென்றதாகவும் கடை உரிமையாளர்கள் தெரிவித்தன.

கைப்பற்றப்பட்ட வெடியின் ஒரு பகுதியை நயினதீவு மயானத்தில் வைத்து தீயிட்டனர் இதனல் அப்பகுதி மக்கள் சிறிது நேரம் பரபரப்படைந்தனர். எஞ்சிய வெடிகளை மீட்பதற்கு எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை

குறைந்த சலார்!
முதலாவது ஆண்டு நிறைவையொட்டி இச்சலுகை வழங்கப்படுகிறது!!
சகல அளவு போட்டோக்களுக்கும்
ஸ்ரூடியோ டில்கா
202, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8174
பஸ் நிலையம் முன்பாகவுள்ள மேல்மாடியில் அமைந்துள்ளது.

# "எதிரி கிறிஸ்கத்தியால் குத்தியதை நான் வடிவாகப்பார்த்தேன்"

## கைலாசபிள்ளையார் கோவிலடி கொலைவழக்கில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

'நாங்கள் ஆறு பேரும் கைலாசபிள்ளையார் கோவிலடியில் நின்றோம். எதிரி ஓடி வரும்பொழுது ஆட்கள்10—15 பேர் நின்றார்கள். அப்பொழுது இறந்த திருநாவுக்கரசுவும் பக்கத்தில் நின்றார். எதிரி ஓடிவந்து திருநாவுக்கரசுவை கிறிஸ் கத்தியால் குத்தினார். நான் வடிவாய்ப் பார்த்தேன்.'

இவ்வாறு கைலாசபிள்ளையார் கோவிலடியில் வைத்து அருளானந்தம் திருநாவுக்கரசு என்பவரை 30.7.81ல் கைலாசபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த வைத்திலிங்கம வைகுந்தவாசன் (ராதா)என்பவர் குத்திக் கொலைசெய்ததாக யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியமளிக்கையில் செல்லத்துரை மகேந்திரன் என்பவர் சொன்னார்.

யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் எஸ். நவரத்தினராசா இவ்வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

எதிரியின் சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம் சாட்சிகளைக் குறுக்குவிசாரணை செய்தார்.

நேற்றுமுன்தினமும் நேற்றும் இவ்வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

சாட்சி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது;—

'கருணாகரன் ஈச்சமட்டையில் வசிப்பவர். கருணாகரனும் நானும் சாவகச்சேரி நீதிமன்றத்தில் வேலைசெய்தோம். இபபோ இருவரும் அங்கு இல்லை. சாவகச்சேரி நீதிமன்றத்தில் துப்பாக்கி களவு போனது தெரியும்.

மனோகரனை 4—5 வருடமாகத் தெரியும். அவர் வசிப்பது கைலாசபிள்ளையார் கோவில் ஒழுங்கை.

சேகர் என்பவர் கோவில் வீதியில் றக்காறோட் சந்தியில் வசிப்பவர். அவரையும் 4—5 வருஷம் தெரியும். பாபு என்பவர் மனோகரனின் சிநேகிதன். வசிப்பது அம்மன் வீதியில். பாபுவை ஒரு வருஷமாகத் தெரியும்,

கைலாசபிள்ளையார் கோவிலடியில் எனக்குச் சொந்தக்காரர் இல்லை.

இறந்த திருநாவுக்கரசு பவுண் வேண்டி விற்கிற வியாபாரத்தில் ஈடுபட்டவர்.

''நான் இப்போது வேலையில்லாமலிருக்கிறேன். நான் ஒருவருஷத்துக்கு சிங்கப்பூர் போய்வந்தேன்.

என்னை பாஸ்போட் மகேந்திரன் என்று சொல்வது தெரியாது

''இறந்த திருநாவுக்கரசுவின் மனைவியை எனக்கு இரண்டரை வருடமாகத் தெரியும். வழக்கை விரிவாக நடாத்தவேண்டும் என்றும் நடந்தவற்றை வடிவாக சாட்சியத்தில் சொல்ல வேண்டும் என்றும் பொலிசாருக்கு சொன்ன மாதிரியே நாங்கள் கூறவேண்டும் என்றும் சொன்னேன். நேற்று மன்றில் சாட்சியம் அளித்த பின்பு சாட்சிகளுடன் கதைத்தேன். மன்றுக்கு வெளிச் சென்று சந்தித்துக்கதைத்தேன். நான் கூறியவற்றை அவர்களுக்குச் சொன்னேன்.

''சம்பவதினத்தன்று 6 பேர் சேர்ந்து வேலுப்பிள்ளை வீட்டில் இரண்டரைப்போத்தல் சாராயம் குடித்தோம். 7 மணி இரவு தொடக்கம் 8—30 மணி வரை அருந்தினோம் சம்பவம் நடக்கும் பொழுது மது போதையிலிருந்தோம் நான் இறந்த திருநாவுக்கரசு மனோகரன் கருணாகரன், பாபு, அண்டனி ஜோசப்.

''சம்பவம் நடந்த அன்று நாங்கள் மனோகரனை வீட்டில்விட கைலாசபிள்ளையார் கோவிலடிக்குபோனோம்.

### சிகரெட்தான் பிரச்னைக்கு காரணம்

29.7.81ல் நாங்கள் மனோகரன் வீட்டுக்குச் செல்லும் பொழுது நானும், மனோகரனும், பாபுவும் இருந்தோம். எதிரியைச் சந்தித்தோம். எதிரி மனோகரனிடம் சிகரெட் கேட்டார், அவர் கொடுக்கவில்லை. என்னைக் கேட்டார். நானும் கொடுக்கவில்லை. அதன் பின்பு எதிரி பயமுறுத்திவிட்டுச் சென்றுவிட்டார். கைகலப்பு நடக்கவில்லை. சிகரட் கேட்டதுதான் பிரச்னை, நான் பொலிசுக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் சிகரட் காரணமாக பிரசனை ஏற்பட்டதென்று கூறினேனோ இல்லையோ ஞாபகமில்லை.

29.7.81இரவு எதிரியின்தாய் வீட்டு வேலி எரிந்ததாக கேள்விப்பட்டேன், எனக்குத் தெரியும். அந்த, வேலியை எரித்தது நானும் எனது சகாக்களும் என்று அயலவர்கள் பேசிக்கொண்டார்கள் என்பது இற்றைவரை எனக்குத் தெரியாது. நான் மகேஸ்வரி வீட்டுக்குச் சென்று இந்த வழக்குப் பற்றிக் கூறிப் பயமுறுத்தவில்லை. நான் சம்பவதினமான 30ந் திகதி இறந்தவரை மாட்டீன் வீதி ஒழுங்கையில் சந்தித்தேன். நான் மகேஸ்வரி வீட்டுக்குச் சென்று இறந்தவரை அன்று கூட்டிப் போகவில்லை. சம்பவ தினத்தன்றுநானும்அன்ரன் ஜோசப்பும், வேறொருவரும்இறந்தவர் வீட்டுக்குச் சென்று அவரைக் கூட்டிப்போகவில்லை. அவரே வந்தார்,

எதிரி ராதாவின் வீடு, சம்பவம் நடத்த இடத்திலிருந்து 100 யாருக்கு அப்பால் உள்ளது.

எதிரியின் தகப்பனார் இறந்து அந்தியேட்டிக் கிரியைக்காகத்தான் எதிரி ஈராக்கிலிருந்து வந்திருந்தார். நாங்கள் இரவு 9—30 மணி அளவில் கைலாய பிள்ளையார் கோவில்டிக்குச் சென்ற பொழுது எதிரி கோவில் வீதியில் நிற்கவில்லை. சம்பவதினம் நாங்கள் 6 பேரும் மதுபோதையில் கைலாய பிள்ளையார் கோவிலடிக்குச் சென்று கருணாகரனையும் அன்ரன் ஜோசப்பையும் எதிரியின் வீட்டுக்கு அனுப்பி அவரைக் கூட்டிவரச் சொன்னோம் அவர்கள் எதிரியைக் கூட்டி வந்தார்கள்.

நேற்று அளித்த சாட்சியத்தின் மிகுதி நாளைவெளிவரும். விசாரணை தொடர்கிறது.

(மா—அ)

## மஹாபொல...

(1ம் பககத் தொடர்ச்சி)

இதர நூறு ஆறுதல் பரிசுகள் வருமாறு—

(டெலிவிஷன் செட்டுகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 0008 | U | 0547 | 0133 | T | 0164 |
| 0037 | X | 0586 | 0042 | K | 0130 |
| 0003 | A | 0978 | 0067 | F | 0540 |
| 0032 | O | 0033 | 0007 | Z | 0569 |
| 0016 | V | 0113 | 0029 | H | 0881 |
| 0187 | Q | 0182 | 0032 | C | 0100 |
| 0167 | X | 0646 | 0077 | K | 0791 |
| 0189 | F | 0462 | 0020 | P | 0046 |
| 0136 | Y | 0711 | 0086 | P | 0191 |
| 0163 | A | 0537 | 0179 | W | 0981 |
| 0148 | V | 0379 | 0117 | R | 0145 |
| 0069 | B | 0218 | 0005 | G | 0857 |
| 0173 | J | 0291 | 0141 | X | 0783 |
| 0054 | V | 0440 | 0178 | Y | 0239 |
| 0108 | D | 0407 | 0144 | W | 0430 |
| 0094 | C | 0749 | 0100 | E | 0380 |
| 0182 | K | 0683 | 0143 | T | 0077 |
| 0063 | Y | 0335 | 0144 | X | 0537 |
| 0179 | T | 0574 | 0175 | R | 0700 |
| 0010 | Y | 0873 | 0001 | N | 0972 |
| 0095 | W | 0173 | 0038 | K | 0135 |
| 0139 | X | 0047 | 0199 | T | 0810 |
| 0147 | F | 0316 | 0114 | O | 0627 |
| 0174 | T | 0644 | 0141 | C | 0650 |
| 0194 | S | 0848 | 0067 | P | 0357 |
| 0096 | T | 0768 | 0091 | F | 0494 |
| 0183 | L | 0687 | 0028 | B | 0576 |
| 0 52 | P | 0616 | 0029 | V | 0052 |
| 0071 | E | 0938 | 0094 | N | 0565 |
| 0146 | R | 0429 | 0166 | Y | 0120 |
| 0174 | G | 0810 | 0182 | L | 0440 |
| 0159 | E | 0201 | 0142 | T | 0596 |
| 0040 | E | 0035 | 0168 | U | 0147 |
| 0173 | J | 0405 | 0010 | S | 0553 |
| 0019 | Y | 0965 | 0145 | E | 0036 |
| 0008 | L | 0567 | 0103 | P | 0270 |
| 0105 | Q | 0942 | 0150 | Z | 0020 |
| 0142 | N | 0503 | 0113 | X | 0395 |
| 0066 | G | 0769 | 0085 | Y | 0931 |
| 0186 | W | 0360 | 0115 | H | 0584 |
| 0136 | F | 0876 | 0138 | F | 0342 |
| 0088 | T | 0876 | 0013 | G | 0944 |
| 0027 | M | 0455 | 0009 | H | 0815 |
| 0085 | M | 0879 | 0170 | E | 0716 |
| 0143 | C | 0920 | 0162 | Y | 0559 |
| 0137 | Y | 0210 | 0025 | P | 0020 |
| 0029 | U | 0653 | 0198 | A | 0246 |
| 0041 | U | 0973 | 0098 | U | 0303 |
| 0117 | Y | 0409 | 0067 | C | 0618 |
| 0034 | C | 0651 | | | |


# முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி



## திரு. சி. சிவரத்தினம்

தோற்றம்: 1907.08.29
மறைவு: 1981.01.21

எங்கள் இதயபீடத்தில் என்றும் பொலிவாய் இருக்கின்ற அன்பின் உருவே, அரும் பொருளே, அயராது எம்மை வாழவைத்த எங்கள் தலைவா! இன்றேபோல் என்றும் நினைவோம்—நீர் வாழி!

இங்ஙனம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை

'பகவான் கடாட்சம்',
இளவாலை வடக்கு,
இளவாலை.

2020


# மினிபஸ் விற்பனை மோசடி: கரவெட்டிவாசிக்கு ரூ. 25 ஆயிரம் பிணை

(யாழ்ப்பாணம்)

மினி பஸ் விற்பனவு சம்பந்தமாக 70,000ரூபா மோசடி செய்ததாகக் கைதுசெய்யப்பட்ட ஒருவரை யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் 25 ஆயிரம் ரூபா பிணையில் செல்லும்படியும். அடுத்த் மாதம் 24ந் திகதி கோர்ட்டில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

கரவெட்டியைச் சேர்ந்தவரும், கல்முனையில் கடை வைத்திருப்பவருமான சதானந்தராசா என்பவர், தமக்குச் சொந்தமில்லாத சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான மினி பஸ்ஸை, திருநெல்வேலியைச் சேர்ந்த பொ இராசையா என்பவருக்கு 70,000 ரூபா முற்பணமாகப் பெற்று, மீதிப் பணத்துக்கு ஒரு மாதத் தவணை கொடுத்ததாகவும், பின்பு ஒரு மாதம் முடிவதற்குள் அந்த மினி பஸ்ஸை பினான்ஸ் நிறுவனம் மூலம் எடுத்துச் சென்றதாகவும் யாழ் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

யாழ். பொலிஸ் புலன் விசாரணைப் பகுதி சார்ஜன்ட் ஜி எஸ். பிள்ளை சந்தேக நபரைக் கல்முனையில் வைத்துக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருந்தார். (மா)

## இன்று கருத்தரங்கு

(துணுக்காய்)

துணுக்காய்ப் பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை நடைபெறும். (க)

## உண்ணாவிரதப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஸ்தாபனத்தின் தலைவர் வண.பிதா யோகான் தேவானந்தா இப்போராட்டத்திற்குப் பூரண ஆதரவு கொடுப்பதாகக்கடிதம் எழுதியுள்ளார். அந்த ஸ்தாபனத்தின் சார்பில் கொழும்பிலிருந்தும் பிரதிநிதிகள் பங்கு பற்றுவார்கள்.

இந்த உண்ணாவிரதப்போராட்டம் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, இரத்தினபுரி களுத்துறை, குருநாகல், யாழ்ப்பாணம், இரத்மலானை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இப்போராட்டத்தில் அரசியல் நோக்கம் எதுவும் கிடையாது என்றும் வேலை இழந்த ஊழியர்களுக்கு மீண்டும் வேலையைப் பெற்றுக்கொடுப்பதே இப்போராட்டத்தின் குறிக்கோள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## தமிழர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதிவுக்கென உரிமை வழங்கப்பட்டு, அதற்கான தஸ்தாவேஜுகள் கிடைத்தவுடன் காணிப் பதிவாளர், காணிப் பதிவுச் சட்டத்தின் கீழ் அதனைப் பதிவுசெய்யவேண்டும். இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்கள் காணிப் பதிவாளரிடம் விண்ணப்பிக்கும்போது தாம், இலங்கைப் பிரஜை அல்லவென்பதைத் தெளிவாகத் தெரிவிக்கவேண்டும். தவறும்பட்சத்தில் சம்பந்தப்பட்டவருக்கு ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் அல்லது இரண்டு வருடச் சிறைத் தண்டனையும் அல்லது இரண்டும் அல்லது காணிப் பெறுமதியும், 20 மடங்கு அபராதமும் விதிக்கப்படும். [மு]

## இராமநாதன் கல்லூரியில் இசைவிழா

(மாவிட்டபுரம்)

யாழ். பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவின் ஆதரவில் நாளை தொடக்கம் மூன்று நாட்கள் இசைவிழா நடைபெறஉள்ளது.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நிகழும் இந்த இசைவிழாவில் மேற்படி நுண்கலைப்பிரிவு மாணவர்களது நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

முதல்நாள் நிகழ்ச்சிகளுக்குப் பேராசிரியர் கா. இந்திரபாலாவும், இறுதிநாள்நிகழ்ச்சிகளுக்கு துணைவேந்தர் சு. வித்தியானந்தனும் தலைமைவகிப்பார்கள்.

## லங்கா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் வருடாந்த மகாநாட்டின் போது மேற்படி பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற கட்சியின் வருடாந்த மகாநாட்டில்' அடுத்த அரசாங்கத்துக்கான அடிப்படை' என்ற தலைப்பில் தீர்மானங்கள் சிலவும் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்ட பின்னர் எவ்வித எதிர்ப்புமின்றி அவை நிறைவேற்றப்பட்டதென கட்சிப்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சிகள் யாவற்றையும் ஒன்றிணைத்துப் போட்டியிட்டு கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்கவும் லங்கா சமசமாஜக்கட்சி ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (க]


# மரண அறிவித்தல்

## சொக்கநாதர் கார்த்திகேசு

[நொத்தாரிஸ் — நெடுந்தீவு]

காலஞ்சென்ற நொத்தாரிஸ் சொக்கநாதர் கார்த்திகேசு அவர்களின் இறுதிக்கிரியைகள் [21 - 01 - 82] இன்று காலை 10 மணிக்கு நெடுந்தீவில் நடைபெறும்.

2035


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஹு ஜனவரி மீ 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.